தமிழ்Mirror
www.tamilmirror.lk
MONDAY, NOVEMBER 7, 2022
திங்கட்கிழமை நவம்பர் 07, 2022 | ஒளி: 08 கதிர்: 137 | பக்கம்:08 | நகரப்பதிப்பு FREE



பாலானது விரைவாகத் தயிர் ஆகாதது போல, பாபச் செயல்கள் விரைவில் பலன் தருவதில்லை. நெருப்பில் நீறு பூத்தது போல, மூடர்கள் அதை உணராமல் அதையே செய்கிறார்கள். (தர்ம போதனை)



இலங்கை பெண்கள் 150 பேர் அடிமைகளாக விற்பனை:

# எம்மை மீட்கவும்

## ஓமானில் இருந்து மன்றாட்டம்

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

இலங்கையிலிருந்து டுபாய் நாட்டுக்கு சுற்றுலா விசாவில் அழைத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து ஓமான் நாட்டில் தாங்கள் அடிமைகளாக விற்கப்பட்டுள்ளதாகவும் தங்களை மீட்டெடுக்குமாறும் கோரி ஓமானிலிருந்து 150க்கும் மேற்பட்ட பெண்கள் அவலக் குரல் எழுப்பி மன்றாடியுள்ளனர்.

தொடர்ச்சி P2

# மக்களுக்கு எச்சரிக்கை!

எம். றொசாந்த்

யாழ்ப்பாணம் வசாவிளான், ஒட்டகப்புலம் பகுதிகளில் கள்ள உறுதி முடித்து காணிகள் விற்கப்படுவதாகவும், அதனால் அப்பகுதிகளில் காணிகளை வாங்குபவர்கள் அவதானத்துடன் இருக்குமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில், கடந்த 32 வருடங்களாக இராணுவ கட்டுப்பாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்களாக இருந்த சில காணிகள் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளன.

காணி உரிமையாளர்கள் அவற்றினை அடையாளம் கண்டு அறிக்கைப்படுத்த முன்னர், விடுவிக்கப்பட்ட காணிகளுக்கு உரிமையாளரின் பெயர்களை மாற்றம் செய்தும், உறுதிகளில் மோசடி செய்தும், கள்ள உறுதிகள் முடித்து, அக்காணிகளை விற்பனை செய்யும் முயற்சிகளில் சில குழுக்கள் ஈடுபட்டு வருகின்றன.

தொடர்ச்சி P2

நியாயம் கிடைக்கும் வரை

# போராட்டம் தொடரும்

க.அகரன்



"வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட, கண் முன்னாலே ஒப்படைக்கப்பட்ட அத்தனை பேரும் படுகொலை செய்யப்பட்டார்களா? அல்லது கொலை செய்யப்பட்டார்களா? என்பதனை இந்த அரசாங்கம் ஒப்புக்கொள்கின்றதா? அதனை அமைச்சர் வெளிப்படையாக கூற வேண்டும்" என்று தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், இதற்கான நியாயம் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்" என்று தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் ஊடகவியலாளர் வினவிய கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# குறையாமல் எகிறியது காஸ்




மாதாந்தம் எரிவாயு விலை திருத்தத்துக்கு அமைய இந்த மாதமும் எரிவாயு விலை குறைக்கப்படும் என்று நுகர்வோர் எதிர்பார்த்த போதும், 12.5 கிலோ கிராம் லிட்ரோ எரிவாயுவின் சிலிண்டரின் விலை 80 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம், நேற்று (06) காலை அறிவித்தது.

மேலும், 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 30 ரூபாயாலும், 2.3 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 15 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டு உள்ளதாகவும் நிறுவனம் தெரிவித்தது.

இந்தப் புதிய விலை திருத்தத்துக்கு அமைய 12.5 கிலோ கிராம் நிறையுடைய சிலிண்டரின் விலை 4,280 ரூபாயில் இருந்து 4,360 ரூபாயாக உயர்ந்துள்ளது.

தொடர்ச்சி P2

# நான்கு அமைச்சுகள் ஜனாதிபதி வசமானது

நான்கு அமைச்சுகளது செயற்பாடுகளையும் ஜனாதிபதியின் கீழ் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சு, நிதி,பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, தொழில்நுட்ப அமைச்சு, மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு ஆகியவற்றின் செயற்பாடுகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

# வடக்கில் 3,000 நீரிழிவு நோயாளர்கள்

என். ராஜ்



யாழ். போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை பிரிவில், கடந்த வருடத்தோடு ஒப்பிடும்போது இந்த வருடம் சுமார் 3,000க்கும் மேற்பட்ட நீரிழிவு நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை நீரிழிவு அகஞ்சுரக்கும் தொகுதி விசேட வைத்திய நிபுணர் அரவிந்தன் தெரிவித்துள்ளார்.

நீரிழிவு நோயின் தாக்கம் தொடர்பில் மிக அண்மைய தரவுகளின்படி மேல் மாகாணத்தில் 30 சதவீதமானவர்களுக்கு நீரிழிவு நோயின் தாக்கம் காணப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் 15% சதவீதமானவர்களுக்கு நீரிழிவு நோயின் தாக்கம் காணப்படுகின்றது.

கடந்த இரண்டு, மூன்று வருடங்களாக கொவிட் -19 காலப் பகுதியில் இளைஞர், யுவதிகள் அதாவது 20 - 40 வயதுக்குட்பட்டவர்கள் மத்தியில் நீரிழிவு நோயின் தாக்கம் அதிகரித்து செல்வதை காணக்கூடியதாக உள்ளது.

தொடர்ச்சி P2



# கிரிக்கெட் வீரர் தனுஷ்க கைது; அவுஸ்திரேலிய நீதிமன்றில் ஆஜர்

முழுச் செய்தி P8

# ஐ.நா பொதுச் செயலாளருடன் ஜனாதிபதி ரணில் சந்திப்பு



எகிப்தின் கெய்ரோவைச் சென்றடைந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்கே ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸை சந்தித்தார்.

இச்சந்திப்பின் போது, அரசாங்கத்தின் தேசிய சுற்றாடல் கொள்கை தொடர்பில் ஐ.நா செயலாளர் நாயகத்துக்கு ஜனாதிபதி விளக்கமளித்தார்.

இதன் போது, 1978இல் இலங்கைக்கான தனது முதலாவது விஜயம் தொடர்பில் செயலாளர் நாயகம், ஜனாதிபதியிடம் நினைவுகூர்ந்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான கோப்-27 மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி நேற்று (06) காலை எகிப்து பயணமானார்.

# மட்டக்களப்பில் 800 மாடுகள் உயிரிழப்பு

## அம்பாறையில் தொற்று இல்லை



கனகராசா சரவணன், எம்.எஸ்.எம். ஹனீபா

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த இரண்டு வாரங்களில், நோய் காரணமாக தினமும் 10 மாடுகள் வீதம் சுமார் 800 மேற்பட்ட மாடுகள் வயல்வெளி, குளம் மற்றும் காட்டை அண்டிய பகுதிகளான மேச்சல் தரை பகுதிகளில் உயிரிழந்த நிலையில் சடலங்களாக கிடக்கின்றன என்று கால்நடை வளர்ப்பாளர்கள் கடும் கவலையை தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

# ஆட்காட்டிவெளி மாவீரர் இல்லத்தில் அச்சுறுத்தல்

## நினைவேந்தல் மேற்கொண்டால் சட்ட நடவடிக்கை



எஸ்.லம்பேட்

மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஆட்காட்டி வெளி மாவீரர் துயிலும் இல்லத்தில், மாவீரர் தின ஏற்பாட்டுக் குழுவினரால் நேற்று (06) காலை சிரமதான பணிகள் இடம்பெற்ற போது, அங்கு சென்ற அடம்பன் பொலிஸார், சிரமதானம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டதோடு, மாவீரர் தின நினைவேந்தல்களை மேற்கொண்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அச்சுறுத்தியுள்ளனர்.

தொடர்ச்சி P2

# எரிபொருள் விலை திருத்த திகதிகளை இரத்துச் செய்யவும்

## அமைச்சரிடம் விற்பனையாளர் சங்கம் கோரிக்கை

அமைச்சினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள எரிபொருள் விலை திருத்த அறிவிப்பு திகதிகளை இரத்து செய்யுமாறு மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக பெற்றொலிய விற்பனையாளர்கள் சங்கம் தெரிவித்தது.

தொடர்ச்சி P2

# தேவையான எரிபொருள் கையிருப்பு உள்ளது

## இன்று முதல் வழமைக்குத் திரும்பும்

இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு இல்லை என்றும் நாட்டில் 15 நாள்களுக்கு தேவையான எரிபொருள் கையிருப்பு உள்ளதாகவும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன தகவல்கள் தெரிவிக்கின்றன.

சில எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் எரிபொருட்களுக்கான முன்பதிவுகளை மேற்கொள்ளாததன் காரணமாக சில இடங்களில் நீண்ட வரிசைகள் உருவாகியுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

எரிபொருள் விலை அதிகரிப்பு இந்த வாரத்தில் மேற்கொள்ளப்பட மாட்டாது என்று அமைச்சர் காஞ்சன விஜேசேகர அறிவித்தமைக்கு அமைய முன்பதிவுகள் செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

# கடன் வழங்குநர்களுடனான 2ஆம் சுற்று பேச்சு நிறைவு

கடன் வழங்குநர்களுடனான இலங்கையின் இரண்டாவது சுற்று கலந்துரையாடல் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

சட்ட ஆலோசகர்கள், நிதி ஆலோசகர்கள் மற்றும் சீனா, இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட கடன் வழங்குநர்களுடன் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அனைத்து கடன் வழங்குநர்களையும் வெளிப்படைத் தன்மையுடன் கையாள்வதற்கு இலங்கை இணங்கியுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2

# சயாகரியின் பூதவுடலுக்கு மக்கள் அணிதிரண்டு அஞ்சலி



பூதவுடலுக்கு மக்கள் அணிதிரண்டு அஞ்சலி செலுத்திவருகின்றனர்.



வவுனியா- நொச்சிமோட்டை பகுதியில் 5ஆம்திகதி அதிகாலை இடம்பெற்ற பஸ் விபத்தில் உயிரிழந்த யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவபீடத்தில் கல்வி கற்கும் நாவலப்பிட்டியைச் சேர்ந்த 23 வயதான இராமகிருஷ்ணன் சயாகரியின் பூதவுடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக, நாவலப்பிட்டியில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.அவரது

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி வந்த அதி சொகுசு பஸ், வவுனியா, நொச்சி மோட்டை பாலத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில், சாரதி உட்பட மூவர் பலியானதுடன், கடும் காயங்களுக்கு உள்ளான 16 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சாரதியான கோவிலடி, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த எஸ்.சிவரூபன் (வயது 32), தம்பிட்டி பருத்தித்துறையைச் சேர்ந்த இராமலிங்கம் நிதர்சன் (வயது 24),

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# தம்மை மீட்கவும்

இந்த விடயம் சம்பந்தமாக பாதிக்கப்பட்டு நிர்க்கதி நிலையில் உள்ளதாகக் கூறப்படும் வீட்டுப் பணிப்பெண்கள் அங்கிருந்து தகவல்களை அனுப்பி வைத்துள்ளதுடன், காணொளிகளும் வெளியிடப்பட்டுள்ளன.

அவர்களால் வெளியிடப்பட்ட தகவல்களில் நிர்க்கதிக்குள்ளாகியுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் பெண்கள் ஜனாதிபதியிடம் உருக்கமாக இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளனர்.

அதில் அவர்கள் தெரிவிப்பதாவது, ஓமான் நாட்டில் நிர்க்கதியாகிய நிலையில் இலங்கைக்கு திரும்ப முடியாமல் தினமும் கண்ணீருடன் காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கும் இலங்கைப் பெண்கள் 150 பேரின் துயரக் கதையை இதனூடாக இலங்கை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அரசாங்கத்துக்கும் தூதரகங்களுக்கும் அறிவிக்கிறோம்.

இலங்கையிலுள்ள முகவரும் இங்கே ஓமான் நாட்டிலுள்ள முகவரும் எங்களை ஏமாற்றி சுற்றுலா விசாவில் அழைத்து வந்து எங்களை இங்கே ஓமானில் விற்று விட்டார்கள். இதனால் நாங்கள் இப்போது அடிமைகளாக இங்கே அகப்பட்டுக் கொண்டுள்ளோம்.

இந்த முகவர்கள், எங்கள் ஒவ்வொருவர் சார்பாகவும் சுமார் 18 இலட்சம் ரூபாயை வாங்கிக் கொண்டே எங்களை அடிமைகளாக விற்றிருக்கிறார்கள்.

கையில் பாஸ்போட்டும் இல்லை. அதனையும் பறித்துக் கொண்டார்கள். அதனால் நாங்கள் எங்களது நாட்டுக்குத் திரும்ப முடியாதுள்ளது. தொடர்பாடல் எதுவுமே இல்லாமல் தொடர்பு கொள்ளக் கூடிய அலைபேசிகள் எதுவுமே நாம் பாவிக்க முடியாது மறுக்கப்பட்டுள்ளோம்

எங்களது துயரங்களை ஏறெடுத்துப் பாருங்கள், எமது தாய் தந்தையர், சகோதரர்கள், பிள்ளைகள் அவர்களது நிலைமை அவர்கள் என்ன ஆனார்கள் என்பது கூட எமக்குத் தெரியாது. ஏனென்றால் எங்களுக்குத் தொடர்பு கொள்ளும் எல்லா வழிகளும் மறுக்கப்பட்டு விட்டன.

சம்பளம் இல்லை. சாப்பாட்டுக்கு வழியில்லை. சவர்க்காரம் வாங்கக் வாங்கக் கூட கையில் காசு இல்லை. நாங்கள் பரம ஏழைகள் என்றபடியால்தான் இங்கு வீட்டுப் பணிப்பெண்களாக வந்தோம்.

நாங்கள் அனைவரும் பெண்கள். இங்கே சுகாதார வசதிகளும் பாதுகாப்பும் அற்ற சூழ்நிலையில் தங்க வைக்கப்பட்டுள்ளதால் நாங்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளோம். மாற்றிக் கொள்ள ஆடைகள் கூட இல்லாது அவஸ்தைப் படுகின்றோம்

நோயுள்ள பெண்கள் இங்கே கடும் துயரத்தோடு காலங் கழிக்கிறார்கள். சிலர் எழுந்திருக்க முடியாத நிலையில் உடல் உபாதைகளுக்கும் மன உளைச்சலுக்கும் உள்ளாகியுள்ளார்கள்.

நாங்கள் இங்கே வந்தது எமது வறுமையைப் போக்கவும் பொருளாதார நெருக்கடியிலுள்ள இலங்கை நாட்டுக்கு டொலர் வருமானத்தைப் பெற்றுக் கொடுப்பதற்குமாகும்.

ஆனால் பெரும் தியாகத்தின் மத்தியில் எங்களது தாயை தந்தையை கணவனை, பிள்ளைகளைப் உறவுகளைப் பிரிந்து வந்து குடும்பத்துக்கும் நாட்டுக்கும் உதவி செய்ய வந்த எங்களை இங்கே அடிமைகளாக விற்று எங்களை அவமானப்படுத்தி இருக்கிறார்கள்.

இது சம்பந்தமாக நாங்கள் இங்கே துயரம் தாங்க முடியாமல் கடந்த 26 ஆம் திகதி ஆர்ப்பாட்டமும் செய்தோம் அதற்கும் எந்தத் தீர்வும் இல்லை. இங்குள்ள இலங்கைத் தூதரகமோ, இந்த நாட்டு அரசாங்கமோ, எவருமே கண்டு கொள்ளவில்லை.

நவம்பர் 1ஆம் திகதி தொழில் நீதிமன்றத்துக்கும் சென்றோம். ஆனால். அங்கும் எங்கள் சார்பாக நீதி வழங்கப்படவில்லை. நீதிமன்றம் நாங்கள் பெற்றுக் கொண்ட 18 இலட்சம் ரூபாய் பணத்தையும் கட்டிவிட்டு போகுமாறு கேட்கிறார்கள்.

உண்மையில் இலங்கையிலுள்ள பணிப்பெண்களை இங்கே அழைத்து வரும்பொழுது இலங்கை முகவர்கள், எங்களுக்கு ஒரு இலட்சம் அல்லது இரண்டு இலட்சத்தை மாத்திரம் தந்து விட்டு மிகுதிப் பணத்தை இரு நாடுகளிலுமுள்ள முகவர்கள் சுருட்டிக் கொள்கிறார்கள்.

இது ஒரு மோசடியும் மனிதக் கடத்தலும் அடிமை வியாபாரமுமாகும். எனவே மனித உரிமை அமைப்புக்கள், பெண்ணுரிமை அமைப்புக்கள் இந்த மோசடியை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.எங்களை இந்தத் துயரத்தில் இருந்து மீட்டெடுத்து எங்களது உறவுகளுடன் எங்களைச் சேர்ப்பிக்க வேண்டும்.

இல்லாவிட்டால் இப்பொழுது அடிமைகளாக விற்கப்பட்டு நடுத்தெருவில் நிற்கும் 150 பேரைப் போல இன்னும் பல நூற்றுக் கணக்கான பெண்கள் அடிமைகளாக இலங்கையிலிருந்து கொண்டு வரப்பட்டு விற்கப்படுவார்கள்.

இனிமேல் சுற்றுலா வீசாவில் எந்த இலங்கைப் பெண்ணும் இந்த நாட்டுக்கு வீட்டுப் பணிப்பெண்களாக வர வேண்டாம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# மக்களுக்கு எச்சரிக்கை

எனவே, அப்பகுதிகளில் காணிகளை வாங்குபவர்கள் உறுதி விடயத்தில் அவதனாமாகவும் விழிப்பாகவும் இருக்குமாறும், வாங்கப் போகும் காணிகள் தொடர்பில் தீர விசாரிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெல்லிப்பளை பிரதேச செயலக உத்தியோகபூர்வ சமூக வலைத்தளங்களிலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# போராட்டம் தொடரும்

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், "நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எவரும் உயிரோடு இல்லை என்று அண்மையில் ஒரு கருத்தை வெளியிட்டிருந்தார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட, கண் முன்னாலே ஒப்படைக்கப்பட்ட அத்தனை பேரும் படுகொலை செய்யப்பட்டார்களா அல்லது கொலை செய்யப்பட்டார்களா? என்பதனை இந்த அரசாங்கம் ஒப்புக் கொள்கின்றதா? அதனை அமைச்சர் வெளிப்படையாக கூற வேண்டும்" என்று செல்வம் எம்.பி கேள்வியெழுப்பியுள்ளார்.

"தனக்கு பிரச்சினை வரக்கூடாது என்ற ரீதியிலே அவர்கள் உயிரோடு இல்லை என்று கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே, கண் முன்னால் ஒப்படைக்கப்பட்டவர்கள் எங்கே என்று போராடிக் கொண்டிருக்கின்ற தாய்மார்களுக்கு இது பதிலாக அமையாது.

இந்த விடயத்திலே நீதியமைச்சர் தன்னுடைய கருத்தை வெளிப்படையாக கூற வேண்டும். படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்பதனை கூறுகின்ற போது தான் எங்களுடைய தரப்பிலே அதனை எப்படி நோக்கலாம் என்பதனை கூற முடியும். ஆகவே, உண்மைத் தன்மையை அமைச்சர் விஜயதாச வெளியே கொண்டு வர வேண்டும்" என்றார்.

"அவர்கள் உயிரோடு இல்லை என்ற சாக்குப் போக்கை கூறி வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தாய்மாருடைய போராட்டத்தை மழுங்கடிக்க வேண்டாம். ஆகவே அவர்கள் உயிரோடு இல்லை என்றால் என்ன நடந்தது?, படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்களா? அல்லது அனைவரும் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ளார்களா? என்பதை இந்த அரசாங்கம் வெளிப்படையாகக் கூற வேண்டும். மறைத்து கதை சொல்வது என்பது நிறுத்தபட வேண்டும். வருடக் கணக்கிலே தாய்மார்கள் போராடிக்கொண்டு இருக்கிறார்கள். இதற்கான நியாயம் கிடைக்கும் இதற்கான போராட்டம் தொடரும்" எனவும் எம்.பி குறிப்பிட்டார்.

"அவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள், புதைக்கப்பட்டுள்ளார்கள் என்ற செய்தியை அமைச்சர் விஜயதாச கூற வேண்டும். அது தான் நேர்மையான அரசியல் வாதி. அரசாங்கம் மக்கள் சார்ந்த விடயத்தில் அக்கறையோடு இருக்கிறது என்பதனை இந்த விடயங்களில் இருந்து பார்க்க கூடியதாக இருக்கலாம்.

ஆனால் இந்த விடயத்திலே அவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்பதனை ஒத்துக்கொண்டு அதுவும் பாதுகாப்பு செயலாளாராக இருந்த கோட்டபாய ராஜபக்ஷவின் காலத்திலே கண் முன்னாலே ஒப்படைக்கப்பட்டவர்கள், பின்னர் அவர் ஜனாதிபதியாக வந்தும் அதற்கான பதில் கூறவில்லை" என்று சுட்டிக்காட்டினார்.

"தற்போது அமைச்சர் இந்த கருத்தை கூறுகின்ற சூழலிலே, கோட்டபாய ராஜபக்ஷ தலைமையில் இருக்கின்ற அரசாங்கம் அல்லது இராணுவம் அவர்களை படுகொலை செய்தது என்பதனை இந்த அரசாங்கம் ஒத்துக்கொள்கின்ற ஒரு சந்தர்ப்பத்தை தர வேண்டும் என்பது தான் நேர்மையான விடயமாக இருக்கும்.

# ஆட்காட்டி வெளி மாவீரர் இல்லத்தில் அச்சுறுத்தல்

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

எதிர்வரும் 27ஆம் திகதி மாவீரர் தின நினைவேந்தல் இடம் பெறவுள்ள நிலையில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் சிரமதானம் செய்யப்பட்டு, மாவீரர்களின் நினைவேந்தல் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு, இறுதி நாளான எதிர்வரும் 27ஆம் திகதி மாலை மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறும்.

இந்த நிலையில் மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில்,மாவீரர் தின ஏற்பாட்டுக் குழுவினரால், நேற்று (06) காலை சிரமதான பணிகள் இடம் பெற்றன.

அந்த சிரமதான நிகழ்வில் மாவீரர்களின் உறவினர்களும் கலந்து கொண்டிருந்த நிலையில், சிரமதானம் முடியும் சந்தர்ப்பத்தில் துயிலும் இல்ல பகுதிக்கு வந்த அடம்பன் பொலிஸார் சிரமதானம் மேற்கொண்டமை குறித்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

எதிர்வரும் 27ஆம் திகதி மாவீரர் தின நினைவேந்தல் மேற்கொண்டால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்த அடம்பன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் அங்கிருந்து சென்றனர்.

# கடன் வழங்குநர்களுடனான 2ஆம் சுற்று பேச்சு நிறைவு

இலங்கை தனது கடன் வழங்குநர்களிடம் இருந்து உறுதிமொழியைப் பெற்றவுடன், சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை அதன் அனுமதியை வழங்கும் என்று தெரிவித்த அமைச்சர், இந்த செயல்முறைக்கு இந்த கலந்துரையாடல்கள் இன்றியமையாதவை என்றும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கும், நாட்டின் கடனை மறுசீரமைப்பதற்கும் மார்ச் மாதத்தில் இருந்து பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன.

இலங்கை மத்திய வங்கியும் நிதியமைச்சும், கடன் வழங்குநர்களுடன் இணைந்து அவர்களுக்கு தேவையான தகவல்களையும் தெளிவுபடுத்தல்களையும் வழங்குவதாகத் தெரிவித்துள்ள நிலையில், 2022 ஆம் ஆண்டு இறுதிக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற இலங்கை எதிர்பார்க்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கில் 3,000 நீரிழிவு நோயாளர்கள்

நவம்பர் மாதம் உலகளாவிய ரீதியில் நீரிழிவு விழிப்புணர்வு வாரமாகும். இந்த உலக நீரிழிவு விழிப்புணர்வு வாரத்தில் யாழ் மாவட்டத்தில் பல செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றார்.

# எரிபொருள் விலைத்திருத்த...

ஒவ்வொரு மாதமும் 1 மற்றும் 15 ஆம் திகதிகளில் எரிபொருளுக்கான முற்பதிவுகளை செய்யும் போது, விற்பனையாளர்கள் குழப்பமடைவதாக சங்கத்தின் இணைச் செயலாளர் கபில நாதுன்ன தெரிவித்தார்.

எரிபொருள் விலை நிர்ணய சூத்திரத்தில் செய்யப்பட்ட திருத்தங்களின்படி, உலக சந்தையில் மசகு எண்ணெய் விலையில் மாற்றங்களுக்கு அமைய, ஒவ்வொரு மாதமும் 1 மற்றும் 15 ஆகிய திகதிகளில் எரிபொருள் விலை திருத்தம் மேற்கொள்ளப்படும் என அமைச்சரால் அறிவிக்கப்பட்டது.

முன்னதாக, இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனையத்தினால் திகதிகள் இல்லாமல் எரிபொருள் விலை திருத்தங்கள் அறிவிக்கப்பட்டதாகவும் திகதிகள் தெரியாத காரணத்தினால் விற்பனையாளர்கள் தொடர்ந்து தமது முற்பதிவுகளை மேற்கொண்டு வந்தனர்.

எனினும், எரிபொருள் திருத்தத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் திருத்தப்பட்ட விலைகளை முழுமையாக நிர்ணயம் செய்யாமல் எரிபொருள் பௌசர்கள் தங்கள் வளாகத்தை விட்டு வெளியேற சேமிப்பு முனையம் அனுமதிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

தாங்கள் பெறும் இலாபத்தைப் பற்றி அமைச்சுக்கு தெரியப்படுத்த அவர்கள் அதை நடைமுறைப்படுத்துகிறார்கள் என்று குற்றம் சாட்டிய சங்கம், எனவே, எரிபொருள் விலைத் திருத்த திகதியை ரத்து செய்யுமாறு அமைச்சரிடம் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அமைச்சரும் தமது கோரிக்கையை உறுதிப்படுத்தியதுடன், எரிபொருள் விலை திருத்த திகதிகளை இரத்து செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சரிடம் தெரிவித்ததாக சங்கம் குறிப்பிட்டது.

# தேவையான எரிபொருள்...

இதேவேளை, நாட்டில் நிலவும் செயற்கையான எரிபொருள் தட்டுப்பாடு திங்கட்கிழமை (07) முடிவுக்கு வரும் என்று இலங்கை பெற்றோலிய தனியார் பௌசர் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

விற்பனையாளர்கள், தேவையான எரிபொருள் இருப்புகளை முற்பதிவு செய்யத் தவறியமையே பிரதான காரணம் எனவும் இது மனிதனால் உருவாக்கப்பட்ட தட்டுப்பாடு என்றும் சங்கத்தின் செயலாளர் சாந்த சில்வா தெரிவித்தார்.

உலகச் சந்தையில் எரிபொருள் விலைகள் வெகுவாகக் குறைந்துள்ளதால், அரசாங்கத்தின் எரிபொருள் விலைச் சூத்திரத்தின்படி மேலும் குறைக்கப்படும் என்று அவர்கள் எதிர்பார்த்தாகவும் இருப்பினும், எரிபொருள் விலை திருத்தம் செய்யப்படாத காரணத்தால் மீண்டும் முற்பதிவு செய்யத் ஆரம்பித்துள்ளனர் என்று குறிப்பிட்டார்.

# குறையாமல் எகிறியது காஸ்

1,720 ரூபாயாக இருந்த 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 1,750 ரூபாயாகவும், 800 ரூபாயாக இருந்த 2.3 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 815 ரூபாயாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, எரிவாயு விலை குறைக்கப்படும் என்ற அறிப்பைத் தொடர்ந்து, சில விநியோகஸ்தர்களும் சரக்கு சேகரிப்பாளர்களும் எரிவாயுவை கொள்வனவு செய்யத் தயங்குவதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் அண்மையில் தெரிவித்திருந்தார்.

உலக சந்தை நிலவரம் கடந்த மாதத்தைப் போலவே உள்ளதால், அதைக் கொண்டு தற்போதைக்கு விலைகளை கணிக்க முடியாது என்று சுட்டிக்காட்டிய அவர், சில சந்தர்ப்பங்களில் உலக சந்தையில் எரிவாயு விலைகள் குறையாமல் அல்லது கூடாமல் அப்படியே நின்று விடுவதாகவும் குறிப்பிட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

# சயாகரியின் பூதவுடலுக்கு மக்கள் அணிதிரண்டு அஞ்சலி

இராமகிருஸ்ணன் சயாகர் (வயது 23) ஆகியோரே இவ்வாறு மரணமடைந்துள்ளனர். (படம்: ரஞ்சித் ராஜபக்ஷ)

# மட்டக்களப்பில் 800 மாடுகள் உயிரிழப்பு

சித்தாண்டி மற்றும் கிரான் கால்நடை திணைக்களப் பிரிவுகளான சந்தனமடு ஆற்றுப் பகுதியை அண்டிய பகுதியான சித்தாண்டி 4ஆம் பிரிவு, ஈரளக்குளம், ஆலையடி, சேரடி, வேறம் பெரியவெட்டை, மற்றும் வட்டுவான், வெள்ளா மைச்சேனை, கூளாவடி, கோரவெளி, மாதந்தனை, மயிலந்தனை மேச்சல் தரை போன்ற பிரதேசங்களில் ஒருவயது தொடக்கம் ஒன்றரை வயது வரையிலானதும் கர்ப்பமான மாடுகள் என எருமை மாடுகளும் பசுமாடுகளும் நோய் தாக்கத்தினால் உயிரிழந்துவருகின்றன.

இது தொடர்பாக கால்நடை திணைக்கள அதிகாரிகள் உடனடியாக செயற்பட்டு மாரடைப்பால் சுவாசிக்க முடியாது மாடுககள் இறந்துவருதவதாக தெரிவித்து அதற்கான தடுப்பூசி ஏற்றி வருகின்றனர்.

இருந்தபோதும் தடுப்பூசிகள் ஏற்றிய பின்னரும் மாடுகள் வாயால் நுரை வெளியேறி மூக்கால் சுவாசிக்க முடியாது இறந்து வருவதாகவும் சுமார் இருவாரங்களில் 800க்கும் மேற்பட்ட மாடுகள் உயிரிழந்துள்ளன என்கின்றனர்.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் மாடுகளுக்கு தொற்று நோய் ஏற்படவில்லையெனவும், மக்கள் அச்சமடைய வேண்டாமெனவும், கால் நடை சுகாதாரத் திணைக்களத்தின் கிழக்கு மாகாண மேலதிக பணிப்பாளர் டாக்டர் எம்.ஏ. நதீர், நேற்று (06) தெரிவித்தார்.

உகன, மஹஓயா, பதியத்தலாவ, தெஹியத்தக்கண்டி ஆகிய பிரதேசங்களில் மாடுகளுக்கு கிரமமான முறையில் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் கரையோர பிரதேசங்களில் உள்ள பண்ணையாளர்கள் இது தொடர்பாக பிரதேச கால்நடை சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்திற்கு சென்று ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுமாறும், கால்நடைகளுக்குத் தேவையான தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

எவ்வித தயக்கமும் இன்றி உணவுக்காக மாட்டிறைச்சி, பால் போன்றவற்றை கொள்வனவு செய்ய முடியுமென தெரிவித்தார்.

# ஆதிவாசிகளில் ஒருவரை நியமன எம்.பியாக்கவும்

■ பாலித ஆரியவன்ஸ

ஆதிவாசிகள் இனத்திலிருந்து ஒருவரை பாராளுமன்றத்துக்கு தேசிய பட்டியலின் மூலமாக நியமிக்க வேண்டும் எனவும், அவ்வாறு செய்தால் பழங்குடியின மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்றும் ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னில எத்தோ தெரிவித்துள்ளார்.

தம்பானையில் நேற்று முன்தினம் (5) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், பதுளை, மொரனராகலை, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, பொலன்னறுவை ஆகிய ஆறு மாவட்டங்களில் 500,000 இற்கும் மேற்பட்ட பழங்குடியினர் வாழ்கின்றனர்.



அவுஸ்திரேலியா பாராளுமன்றத்தில் பழங்குடியினரின் பிரதிநிதித்துவம் உள்ளது. நேபாளத்தில் பழங்குடியின தலைமுறையைச் சேர்ந்தவர்கள் உயர்பதவிகளை வகிக்கின்றனர். பாராளுமன்றத்திலும் இருப்பதாக நினைக்கிறேன்.

நம் நாட்டில் பழங்குடியின பெண்ணொருவர் உள்ளூராட்சி மன்ற உறுப்பினராக முதன்முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், இந்நாட்டின் முதல் உரிமையாளர்கள், மூத்த குடிகள் எனப் போற்றப்படும் எமது மக்களுக்கு இன்னமும் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் இல்லை.

ஆதிவாசிகளின் பிரச்சினைகளைப் பற்றி பேசுவதற்கு தனி அமைச்சரையோ, தனி அமைச்சையோ உருவாக்க வேண்டுமென அரசாங்கத்திடம் நான் நீண்ட காலமாக பேசி வருகிறேன்.

பல்வேறு இனங்களைப் பற்றி பேசுவதற்கு பாராளுமன்றத்தில் ஒருவர் இருக்கிறார். சில மதங்களை விமர்சிப்பவர்களும் உள்ளனர். ஆனால் இந்த நாட்டின் முதல் சொந்தக்காரரர்களான எமது மக்களின் பிரச்சினைகளை பேசுவதற்கு எங்களில் எவரும் இல்லை என்றார்.

வாக்களிக்க முன்வராதவர்களும் தேர்தலில் தோல்வியுற்றவர்களும் எமது நாட்டின் தேசிய பட்டியலில் இருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படும் நிலையில், எமது தலைமுறையை சேர்ந்த ஒருவர் பாராளுமன்றத்துக்கு தெரிவுசெய்யும் உரிமை எமக்கு உண்டு என்றார்.



## இந்திய ஏவுகணை சோதனையை

# சீனாவின் மற்றுமோர் ஆய்வுக் கப்பல் கண்காணிக்கிறதா?

இந்தியப் பெருங்கடல் பகுதிக்குள் நுழைந்துள்ள சீனாவின் மற்றோர் ஆய்வுக் கப்பல், இந்திய ஏவுகணை சோதனையை கண்காணிப்பதாக புகார் எழுந்துள்ள நிலையில், இதுகுறித்து பாதுகாப்புத் துறை விளக்கம் அளித்துள்ளதென இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

சீனாவின் ஆய்வுக் கப்பல் 'யுவான் வாங் 5', இலங்கையில் சீனா குத்தகைக்கு எடுத்துள்ள ஹம்பந்தோட்டை துறைமுகத்துக்கு கடந்த ஓகஸ்ட் மாதம் வந்தது.

அங்கு ஒரு வாரம் இருந்த கப்பல், எரிபொருள் உட்பட தேவையான பொருட்களை நிரப்பிக் கொண்டு சென்றதாக கூறப்பட்டது. இந்தக் கப்பல் ஏவுகணைகள் மற்றும் செயற்கைக்கோள்களை கண்காணிக்கும் திறன் வாய்ந்ததால், இந்தக் கப்பலின் வருகைக்காக, இலங்கையிடம் இந்தியா தனது கவலையை தெரிவித்தது.

இந்நிலையில் சீனாவின் மற்றோர் ஆய்வுக் கப்பல் 'யுவான் வாங் 6', இந்திய பெருங்கடல் பகுதியில் வெள்ளிக்கிழமை (04) நுழைந்துள்ளது. இது போர்ட் பிளேயரில் இருந்து 3,500 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள லம்பாக் ஜலசந்தியின் தென் பகுதியில் நிற்கிறது.

ஒடிசா அருகேயுள்ள ஏபிஜே அப்துல் கலாம் தீவில் இருந்து பரிசோதிக்கப்படும் ஏவுகணைகளைக் கண்காணிக்க இந்தக் கப்பல் வந்ததாக ட்விட்டரில் தகவல் வெளியாகின. இந்தியாவின் ஏவுகணை பரிசோதனையை, சீனாவால் அதன் செயற்கைக்கோள்கள் மூலமே கண்காணிக்க முடியும். எனவே இந்தக் கப்பலின் வருகை, இந்திய பாதுகாப்பு துறையினருக்கு எந்தக் கவலையையும் அளிக்கவில்லை.

இதுகுறித்து இந்திய பாதுகாப்புத்துறை அதிகாரிகள் கூறுகையில், "வரும் 12ஆம் திகதியும் மாத இறுதியிலும் செயற்கைக்கோள்களை ஏவ சீனா திட்டமிட்டுள்ளது. அதை கண்காணிப்பதற்காகவே சீன கப்பல் இந்தியப் பெருங்கடல் பகுதியில் முகாமிட்டுள்ளது" என்றனர். ஆனால், இந்தக் கப்பலுக்கு இலங்கை துறைமுகம் வரும் எந்தத் திட்டமும் இல்லை.

சீன கப்பல்கள் மலாக்கா, லம்பாக், ஓம்பாய் அல்லது வெடார் ஜலசந்திகள் வழியாகத்தான் இந்திய பெருங்கடல் பகுதிக்குள் நுழைய முடியும். இவை அனைத்தும் இந்தோனேஷியாவின் கட்டுப்பாட்டில் உள்ளன.

இதனால் மாற்று வழிகளை கண்டறிவதற்காக சீன ஆய்வுக் கப்பல்கள், இந்திய பெருங்கடல் பகுதியில் கடல் ஆழம் பற்றிய சர்வே பணிகளை அதிகரித்துள்ளன. ஆபிரிக்காவின் ஜிபூட்டியில் சீனாவின் கட்டுப்பாட்டில் இயங்கும் துறைமுகம், சீன நிறுவனங்களின் பங்குகள் உள்ள ஐரோப்பிய துறைமுகங்களுக்கு சீன கப்பல்கள் செல்வதற்காக இந்தியப் பெருங்கடல் பகுதியில், மாற்று கடல் வழிகளை ஆராயும் பணியில் சீனா தீவிரமாக ஈடுபட்டுள்ளது என்றும் இந்திய செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# நன்மை பயக்குமாயின் காங்கிரஸ் ஆதரவளிக்கும்

■ எஸ்.கணேசன், ஆ.ரமேஸ்

2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்ட பின்னர் அதன் உள்ளடக்கங்கள் தொடர்பில் ஆராயப்படும். மக்களுக்கு நன்மை பயக்கக்கூடியதெனில் அதற்கு ஆதரவாக வாக்களிப்போமென இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கலாசார அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கந்தப்பளை, எஸ்க்கடேல் தோட்டத்துக்கான 'ஆறுமுகம் தொண்டமான் கலாசார மண்டபம்' திறக்கும் நிகழ்வு நேற்று (06) நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

2023 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி முன்வைக்கப்படவுள்ளது. அதை யார் முன்வைக்கின்றார் என்பது முக்கியம் அல்ல. அதில் உள்ள விடயங்கள்தான் பிரதானம். அந்தவகையில் பாதீட்டின் உள்ளடக்கங்கள் தொடர்பில் முதலில் ஆராயப்படும். அதில் மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய விடயங்கள் இருந்தால் நிச்சயம் ஆதரிப்போம். ஏனைய கட்சிகளும் ஆதரிக்க வேண்டும் என கோரிக்கை விடுப்போம் என்றார்.

# அமைச்சர்கள் சிலர் இராஜினாமா?



அரசாங்கத்தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாகப் பதவிவகிக்கும் சிலர், தங்களுடைய அமைச்சர் பதவிகளை இராஜினாமாச் செய்வதற்கு தீர்மானித்துள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவ்வாறு இராஜினாமா செய்வோர், புதிய அரசியல் பயணத்தை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளனர் என்றும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

"என்னுடைய அமைச்சர் பதவியை இராஜினாமா செய்வேன்" எனத் தெரிவித்துள்ள அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ உள்ளிட்ட இன்னும் சிலரே, இவ்வாறு தங்களுடைய அமைச்சர் பதவியை இராஜினாமா செய்வதற்கு தீர்மானித்துள்ளனர்.

அவ்வாறானவர்கள், முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான நீதியான சமுதாயத்துக்கான தேசிய இயக்கத்தில் இணைந்து, தங்களுடைய எதிர்கால அரசியலை முன்னெடுக்கவுள்ளனர் என்றும் அறியமுடிகின்றது.

இந்நிலையில், 2023 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்பித்ததன் பின்னர் முழுமையான அமைச்சரவை மாற்றமொன்றை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த எம்.பிக்களுக்கு மேலதிகமாக, தமிழ், முஸ்லிம் கட்சிகளின் உறுப்பினர்கள் சிலர், புதிய அமைச்சரவைக்குள் உள்வாங்கப்படவுள்ளனர்.

இந்நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த 10 எம்.பிக்கள், அரசாங்கத்துடன் இணைய உள்ளனர் என்றும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ராஜித இணைவார்; மஹிந்த ஆருடம்

முன்னாள் அமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன, அரசாங்கத்துடன் இணைந்துகொள்வார் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தனக்கு நெருக்கமானவர்களிடம் தெரிவித்துள்ளார்.

அதன்பின்னர், ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் பலர், ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்துகொள்வார்கள் என்றும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத் திட்டத்துக்கு முன்னர் அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படும். அந்த மாற்றத்தின் போது, புதிய அமைச்சர்கள் சிலர் நியமிக்கப்படுவார்கள், முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவும் அமைச்சர் பதவியொன்றை பொறுப்பேற்றுக்கொள்வார் என்றும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# மொட்டுக்குள் கடும் அதிருப்தி



தாமரை மொட்டை சின்னமாகக் கொண்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் செயற்பாடுகள் தொடர்பில் அமைச்சர்கள் சிலர் அதிருப்தி கொண்டுள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெரமுனவை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கும், 2015 ஆம் ஆண்டு தோல்விக்குப் பின்னர் மற்றும் இவ்வருடம் ஏற்பட்ட சம்பவங்கள் தொடர்பில் பாடங்களைக் கற்றுக்கொண்டு, அதனடிப்படையில் செயற்பாடாமை காரணமாக இந்த அதிருப்தி ஏற்பட்டுள்ளது என்றும் அறியமுடிகின்றது.

இதனால், பெரமுனவைச் சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்கள் குழுக்களாக பிரிந்து பல்வேறு சந்திப்புகளை நடத்தி வருகின்றனர் என்றும் அதன்போதே, மேற்கண்ட விடங்கள் தொடர்பில் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர் என்றும் அறியமுடிகின்றது.

இவ்வாறான சந்திப்புகளின் போது, கட்சியின் இளம் உறுப்பினர்களின் பங்குப்பற்றல் மிகவும் குறைவாக இருந்தது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பாலியல் துன்புறுத்தல்:

# ஆலோசகருக்கு விளக்கமறியல்

பாடசாலை மாணவிகள் ஆறு பேரை அவ்வப்போது பாலியல் ரீதியில் துன்புறுத்தினார் என குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ள விளையாட்டு ஆலோசகர் எதிர்வரும் 17ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கெக்கிராவ பிரதேசத்தில் உள்ள பிரபல பாடசாலையில் கல்வி பயிலும் மாணவிகளையே இவர், பாலியல் ரீதியில் துன்புறுத்தியுள்ளார்.

கைது செய்யப்பட்ட விளையாட்டு ஆலோசகர், கெக்கிராவ நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே, நீதவான் சமன் வெரனியகொட மேற்கண்டவாறு கட்டளையிட்டுள்ளார்.

இந்த மாணவிகள் அறுவர் தொடர்பிலான வைத்திய பரிசோதனை அறிக்கையை, கெக்கிராவ பொலிஸ் நிலைய சிறுவர் மற்றும் மகளிர் பிரிவுக்கு சமர்ப்பிக்குமாறு தம்புள்ளை வைத்தியசாலையின் நீதிமன்ற வைத்திய அதிகாரிக்கு, நீதவான் கட்டளையிட்டுள்ளார்.

# ரவி வருகிறார்



முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, பாராளுமன்றத்துக்கு நுழைவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமென கொழும்பு வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் பதவியொன்றை பொறுப்பேற்றுக் கொள்ளும் வகையிலேயே அவர், தேசிய பட்டியலின் ஊடாக பாராளுமன்றத்துக்குள் பிரவேசிக்க உள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியலின் ஊடாகவே அவர் எம்.பியாக பதவியேற்க உள்ளார் என்றும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்தப் பட்டியலின் ஊடாக பாராளுமன்றத்துக்குச் சென்றிருக்கும் ஒருவருக்கு, பெருந்தொகையில் நிதியைக் கொடுத்து அதனூடாகவே ரவி கருணாநாயக்க பாராளுமன்றத்துக்குள் பிரவேசிக்க உள்ளார் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மேற்கோள் காட்டி, வாராந்த பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

# கழுத்துகளில் முடிச்சு போட்ட தந்தை கைது

தன்னை விட்டுச் சென்ற மனைவியை மீண்டும் அழைப்பதற்காக, தன்னுடைய ஐந்து வயது மகள் மற்றும் 16 வயது மகள் ஆகிய இருவரின் கழுத்துகளிலும் முடிச்சுப் போட்ட, அப்பிள்ளைகளின் தந்தையும், விட்டுச் சென்ற மனைவியின் கணவனும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மனைவி வீட்டை விட்டு வெளியேறி சென்றமையால், இரண்டு பிள்ளைகளுடன் தனிமையில் வாழ்ந்துவந்த சந்தேகநபர், தனது மனைவியை மீண்டும் அழைத்துவருவதற்கு பல சந்தர்ப்பங்களில் முயன்றுள்ளார்.

அவருடைய அந்த முயற்சி கைகூடாமையை அடுத்தே, தன்னுடைய பிள்ளைகள் இருவரின் கழுத்துகளிலும் இவ்வாறு முடிச்சு போட்டுள்ளார் என அறியமுடிகின்றது.

# பட்டியலை பார்க்காவிடின் பாதீடு தோற்கும்




2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னர், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன முன்வைத்துள்ள பெயர்கள் அடங்கிய பட்டியலில் உள்ள பெயர்களை உள்ளடக்கிய புதிய அமைச்சரவையை நியமிக்காவிடின், பட்ஜெட் (பாதீடு) தோற்கடிக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமென ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி எதிர்வு கூறியுள்ளது.

புதிய அமைச்சரவைக்குள் தங்களுடைய குழு சார்பில் உள்ளடக்க வேண்டிய பெயர் பட்டியலை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரனமுன சமர்ப்பித்துள்ளது. எனினும், புதிய அமைச்சரவையை நியமிப்பது காலந்தாழ்த்தப்படுகின்றது. இதனால், பெரமுனவுக்குள் ஒரு சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

அமைச்சரவைக்குள் உள்வாங்க வேண்டியவர்கள் தொடர்பிலான பெயர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளவர்களை புதிய அமைச்சரவைக்குள் இணைத்துக்கொள்ளாவிடின், 2023 ஆம் ஆண்டுக்கான பாதீடு தோல்வியடைவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வரவு- செலவுத் திட்டம் அவ்வாறு தோற்கடிக்கப்படுமாயின். அவரசமாக பொதுத் தேர்தலொன்றை சந்திக்கவேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் அக்கட்சி எதிர்வுகூறியுள்ளது.

# பருத்தித்துறை துறைமுகத்தை நவீனமயமாக்க வேண்டாம்

### சுப்பர்மடம் மீனவர்கள் முறைப்பாடு

■ எஸ். தில்லைநாதன்

பருத்தித்துறை துறைமுகம் நவீனமயமாக்கப்பட்டால், தாம் பெரிதும் பாதிக்கப்படக் கூடிய வாய்ப்பு அதிகம் என பருத்தித்துறை, சுப்பர்மடம் மீனவர்கள், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்திடம் முறையிட்டுள்ளனர்.

மயிலிட்டி துறைமுகம் புனரமைக்கப்பட்டதன் பின்னர், மயிலிட்டியை சேர்ந்த ஒரு தொழிலாளி கூட தொழிலில் ஈடுபட முடியாதுள்ளதாகவும், இது நல்லதோர் உதாரணம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை துறைமுகம் அமைப்பதற்குரிய ஏற்பாடுகள் இடம் பெறுவதாக அறிந்து, எதிர்ப்பு தெரிவித்த போது அப்போதைய பிரதேச செயலாளர் ஜயசீலன் மற்றும் பாதுகாப்பு தரப்பினர் தம்மை கடுமையாக அச்சுறுத்தியதாகவும், இதனால் ஜனநாயக ரீதியில் எதிர்ப்புத் தெரிவிக்க முடியாத நிலை இருந்ததாகவும் தற்போது கூட பருத்தித்துறை துறைமுகத்தில் படகுகளை கட்டும் தென்னிலங்கை மீனவர்கள், மகளிர் பாடசாலை என்றும் பாராது அநாகரிமாக நடந்து கொள்வதாகவும், பருத்தித்துறை துறைமுகம் விஸ்தரிக்கப்பட்டால் அருகிலுள்ள சுப்பர்மடம், கொட்டடி மீனவர்கள் தமது படகுகளை நிறுத்தி தொழிலுக்குச் சென்று வர முடியாத நிலை ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க அமைப்பாளர் கேர்மன் குமார, அதிகாரத்தில் உள்ள யாரோ ஒருவர் தமது தேவை கருதி பாரதூரமான விளைவுகளைக் கூட பாராமல், இத் திட்டங்களை நடைமுறை படுத்துகின்றார்கள். மக்களிடம் கருத்துகளை அறிவதில்லை; அவர்களுடைய கோரிக்கைகளை கவனத்தில் கொள்வதில்லை; சூழல் மதிப்பீட்டு தாக்கங்கள் தொடர்பில் சரியான ஆய்வுகள் மேற்கொள்வதுமில்லை என்றும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (05) சுப்பர்மடம் மீனவர்களுக்கும், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்துக்கும் இடையிலான சந்திப்பு சுப்பர்மடம் பொது மண்டபத்தில் இடம பெற்றது. இதில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க அமைப்பாளர் கேர்மன் குமார, யாழ். மாவட்ட தலைவர் இ. முரளிதரன், மன்னார் மாவட்ட தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க இணைப்பாளர், யாழ். மாவட்ட இணைப்பாளர், நிர்வாகிகள், சுப்பர் மடம் மீனவர் சங்க பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்

## விருந்தினர் விடுதி காவலாளி மீது வாள்வெட்டு

■ நிதர்சன் வினோத்

யாழ்ப்பாணம், திருநெல்வேலி பகுதியில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியின் பாதுகாப்பு உத்தியோகஸ்தராகக் கடமையாற்றும் அச்சுவேலி, பத்தமேனியைச் சேர்ந்த சதீஸ்குமார் சிந்துஜன் என்பவர் மீது வன்முறை கும்பல் வாள் வெட்டு தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

குறித்த இளைஞன், சனிக்கிழமை (05) அதிகாலை விடுதியின் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த வேளை, மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் அடங்கிய வன்முறை கும்பலே, தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பி சென்றுள்ளது. தாக்குதலில் காயமடைந்த இளைஞன் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகள்



■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

தமிழ்த் தேசிய மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை மேற்கொள்ளும் பொருட்டு, நேற்று (06) கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லப் பணிக்குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இச் சிரமதானப் பணிகளில், அப்பணிக்குழுவின் செயலணி உறுப்பினர்களும் சிவஞானம் சிறீதரன் எம்.பியும் தமிழ்த் தேசிய பயணத்தில் தன்முனைப்பாய் இணைந்து பயணிக்கும் இளைஞர்கள், யுவதிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றிருந்தனர்.

## பனிக்கங்குளத்தில் மான் இறைச்சி விற்றவர் கைது

■ செ. கீதாஞ்சன்

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பனிச்சங்குளம் பிரதேசத்தில் ஏ9 பிரதான வீதியில் அமைந்துள்ள உணவகத்தில், தடை செய்யப்பட்ட இறைச்சி வகைகள் விற்பனை செய்யப்படுவதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய, குறித்த உணவகத்துக்கு சென்ற முல்லைத்தீவு வனஜீவராசிகள் திணைக்களத்தினர், உணவகத்தை சோதனைக்கு உட்படுத்தியபோது மான், மரை இறைச்சி வகைகள் இருப்பது கண்டறியப்பட்டது.

இதனை தொடர்ந்து, குறித்த உணவக உரிமையாளர் கைது செய்யப்பட்டு, முல்லைத்தீவு நீதவான் முன்னிலையில் ஆயர்படுத்தபட்டபோது (06) குறித்த நபரை ஐந்து இலட்சம் பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் விடுவித்ததுடன் 11ஆம் திகதி பகுப்பாய்வு அறிக்கையை சமர்ப்பிக்கவும் நீதவான் உத்தரவிட்டார்.

## வவுனியா பல்கலைக்கழகம்: ஆங்கில உயர் சான்றிதழ் கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரல்

■ க. அகரன்

வவுனியா பல்கலைக்கழகத்தின் வியாபாரக் கற்கைகள் பீடத்தில் அமைந்துள்ள ஆங்கிலக் கற்கைகள் துறையால் இரண்டு வருட ஆங்கில உயர் கற்கை நெறியை (Higher Diploma in English - இலங்கை தகுதி கட்டமைப்பு: தரம் நான்கு - SLQF Level Four) வார இறுதி மற்றும் விடுமுறை நாள்களில் வெளிவாரியாக நடத்துவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இந்த உயர் சான்றிதழ் கற்கைநெறியை பூர்த்திசெய்தவர்கள் தனியார், அரசு சார்ந்த துறைகளில் போதுமான தகைமைகளுடன் தரமுயர்வுகளை பெறுவதற்கும், தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கும் உயர் சந்தர்ப்பங்களைக் கொண்டிருப்பார்கள்.

விண்ணப்ப முடிவு திகதி 30ஆம் திகதி நவம்பர் மாதம் 2022 ஆகும்.

விண்ணப்பப் படிவம், பாட உள்ளடக்கங்கள், விண்ணப்பப்படிவ நடைமுறைகள் போன்றவற்றை வவுனியா பல்கலைக்கழக இணையத்தளத்தின் முதற் பக்கத்தில் பார்வையிடலாம்.

பல்கலைக்கழக இணையத்தள இணைப்பு : https://vau.ac.lk/higher-diploma-in-english

## மாணவர் மத்தியில் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை

■ எஸ். றொசேரியன் லெம்பேட்

பாடசாலை மாணவர்கள் மத்தியில் உருவாகியுள்ள போதைப்பொருள் பாவனையால், அவர்களுக்கு ஏற்படக் கூடிய தீமையான விளைவுகள் தொடர்பான கருத்தரங்குகள், நிகழ்ச்சிகள் என்பன மன்னார் மாவட்டத்தில் உள்ள சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் உள்ள பல பாடசாலைகளில் நிறைவு செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார



சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி. வினோதன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், சுகாதாரத் துறையினரும் கல்வித் துறையினரும் இணைந்து, பாடசாலை மாணவர்கள் மத்தியில் உருவாகியுள்ள போதைப்பொருள் பாவனையால் ஏற்படக்கூடிய தீமையான விளைவுகள் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகள், நிகழ்ச்சிகள் என்பன பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்டன. இதனால் பாதிக்கப்பட்ட மாணவர்கள், பெற்றோரின் சம்மதத்துடன் சிகிச்சைகளை நாடிவரும் ஆரோக்கியமான சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஊடகவியலாளர்களின் வாயை அடைக்க முனைவது அதிகாரிகள் அல்ல

### மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் காட்டம்

■ க. விஜயரெத்தினம்

மட்டக்களப்பில் காணி மோசடி சம்பந்தமாக தமிழ் ஊடகவியலாளர்கள், தமது துறை சார்ந்த ஊடகங்களில் எழுத விடாமல் தவிர்ப்பதற்காக, அவர்களுக்கு ஏறாவூர், செங்கலடி பிரதேசத்தில் 10 பேச் காணி வழங்கி, காணி மோசடி செய்த அதிகாரிகள் அவர்களது வாயை அடைத்திருக்கிறார்கள் என்று ஒட்டுமொத்த தமிழ் ஊடகவியலாளர்களின் சுயகௌரவத்துக்கு பாதிப்பு ஏற்படும் வகையில், பாராளுமன்றத்தில் பிள்ளையான் எம்.பி உரையாற்றி இருப்பது, அவரது காலங்களில் இடம்பெற்ற காணி மோசடிகளை மூடி மறைக்க முனைவது போலவே தெரிகிறது. எனவே, தமிழ் ஊடகவியலாளர்களின் வாயை அடைக்க முயல்வது பிள்ளையான் எம்.பியே தவிர அதிகாரிகள் அல்ல என நேற்று (06) மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர்கள் பலர் தமது அதிருப்தியை வெளியீட்டுள்ளார்கள்.

தொடர்ந்து இவ்விடயம் குறித்து, மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் கருத்து தெரிவிக்கையில், தற்போது இராஜாங்க அமைச்சராக இருக்கும் பிள்ளையான் முதலமைச்சராக இருந்த காலம் தொடக்கம் இன்று வரை, கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் பல நூற்றுக்கணக்கான பூர்வீக காணிகள் அதிகம் பறிபோயிருந்தமை அனைவரும் அறிந்திருப்பார்கள். இதுபற்றிய வியாக்கியானங்கள் தற்போதும் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில், அவருக்கு துதி பாட முடியாத நடுநிலை தமிழ் ஊடகவியலாளர்கள் மீது சேறு பூசும் விதத்தில், அவர் உரையாற்றுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

ஊடகவியலாளர்களுக்கு காணி வழங்கப்பட்ட விவகாரம், முறையாக ஒரு நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் காணிக்கு பொறுப்பான உயர் அதிகாரிகளின் வழிநடத்தலின் அடிப்படையில் வழங்கப்பட்டது. இது விடயமாக இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனும் ஊடகவியலாளர்களுக்கு காணி வழங்கும் விடயத்தில் அக்கறை கொண்டிருந்தார். காணி கொடுக்கப்பட வேண்டும் என உரிய அமைச்சுக்கு பிரஸ்தாபித்திருந்தார் என்று தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளனர்.

## பாலைநகர் விபத்தில் மனைவி பலி; கணவர் படுகாயம்

■ எச்.எம்.எம் பர்ஸான்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலைநகர் பிரதான வீதியில் சனிக்கிமை (05) இரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் படி ரக வாகன விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்தார்.

வாழைச்சேனையில் மகளின் வீட்டுக்கு சென்று விட்டு, பாலைநகரிலுள்ள தமது வீடு நோக்கி, கணவன் - மனைவி இருவரும் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிந்த போது, பின்னால் வந்த படி ரக வாகனம் மோதியதில், ஐந்து பிள்ளைகளின் தாயான 46 வயதுடைய உசனார் ஆமினா உம்மா உயிரிழந்தார். விபத்தில் படுகாயமடைந்த கணவர் ஆதம் பாவா உசனார், மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

## தேசிய மட்டத்தில் மாணவிகள் சாதனை





■ வி.ரி சகாதேவராஜா

அகில இலங்கை தமிழ் மொழித் தினப் போட்டியில் குறுநாடக ஆக்கம் பிரிவு -4 இல் களுதாவளை மகா வித்தியாலய மாணவி உதயகுமார் சனாதனி முதலாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார். இப் போட்டி, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் சனிக்கிழமை (05) நடைபெற்றது.

இதேபோல், அகில இலங்கைத் தமிழ் மொழித் தினப் போட்டியில், சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய மாணவி ஏ.எப். சக்கியா பானு ஐந்தாம் பிரிவு இலக்கிய விமர்சனப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றார்.

## சிறந்த விஞ்ஞான மேம்பாட்டு ஆசிரியர்

■ வ. சக்தி



இலங்கை தேசிய விஞ்ஞான நிறுவகத்தால் 'சிறந்த விஞ்ஞான மேம்பாட்டு ஆசிரியர் - 2022' என்ற தேசிய விருதை பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த இரசாயனவியல் ஆசிரியர் எஸ். தேவகுமார் பெற்றுள்ளார்.

கல்வி அமைச்சின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கிளையும் தேசிய நீர்வழங்கல் வடிகால் வாரியமும் இணைந்து நடத்தும் இளம் ஆராய்ச்சியாளர் போட்டியில், பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்படுவதற்கு, இவரின் நெறிப்படுத்தலே காரணமாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அர்ப்பணிப்புக்கு கௌரவம்



■ எம்.எஸ்.எம் நூர்தீன்

காத்தான்குடி சுயாதீன ஊடகவியலாளர் போரத்தின் ஏற்பாட்டில், 40 வருடமாக சைக்கிளில் பத்திரிக்கை விநியோகம் செய்யும் எஸ்.எம் ஆதம்லெப்பையின் சேவையை பாராட்டியும் க.பொ.த உயர்தரத்தில் கலைத்துறையில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்ற எஸ்.ஏ பாத்திமா சம்லா ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வு சனிக்கிழமை (05) காத்தான்குடி பீச் மூன்வெள்ளி மண்டபத்தில் நடைபெற்றது.

சுயாதீன ஊடகவியலாளர் போரத்தின் தலைவர் ஊடகவியலாளர் ஜெலீஸ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், விடிவெள்ளி பத்திரிகை ஆசிரியர் பி.எம் பைறூஸ், காத்தான்குடி தள வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எம்.எஸ்.எம் ஜாபிர் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டு கௌரவங்களை வழங்கியிருந்தனர்.

## மாபெரும் தொழிற்கல்வி சந்தை

■ கே.எல்.ரி யுதாஜித்

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோனமலை ஆகிய மூன்று மாவட்டங்களிலும், கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் 'திறன்மிகு ஊழியப் படையால் தொழிலுலகை வெல்வோம்' எனும் தொனிப்பொருளில், தொழிற்கல்வி சந்தையை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

அதனடிப்படையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்மாதம் 08, 09, 10ஆம் திகதிகளில் மட்/சிவாநந்தா தேசிய பாடசாலை விளையாட்டு மைதானத்திலும், அம்பாறை மாவட்டத்தில் இம்மாதம் 15,16,17 ஆம் திகதிகளில் நிந்தவூர் மாவட்ட தொழில்பயிற்சி நிலையத்திலும் திருகோணமலை மாவட்டதில் இம்மாதம் 22,23,24 ஆம் திகதிகளில் திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வாரா இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்திலும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்தொழிற்கல்விச் சந்தையினூடாக, உயர்தர மாணவர்கள் தமது உள்ளார்ந்த திறன்களை இனங்காணவும், உயர்கல்வி வாய்ப்புகளை அறியவும், திறனை வளர்க்கத்தக்க தொழிற்பயிற்சி நிலையங்களை அடையாளம் காணவும், தொழில் வழங்குநர்கள், சுய முயற்சியாளர்களைக் கண்டறியவும் அவர்களது அனுபவங்களையும் பெற்றுக்கொள்ள முடியும் என கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

## வெபர் அடிகளாருக்கு திருவுருவச்சிலை

■ க. விஜயரெத்தினம்

அருட்தந்தை ஹரல்ட் ஜோன் வெபர் அடிகளாரின் உருவச்சிலை, மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் வெள்ளிக்கிழமை (04) மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தி. சரவணபவன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

அமெரிக்காவில் 20 பெப்ரவரி 1914 பிறந்த அடிகளார், தனது இறுதி மூச்சுவரை மட்டக்களப்பு மாவட்டத்தில் சமயப்பணி, சமூகப்பணி, கல்விப்பணி மற்றும் விளையாட்டு துறையைக்



கட்டியெழுப்புவதிலும் அயராது சேவையாற்றி 1998 ஏப்ரல் 14 திகதி இறைவனடி சேர்ந்தார்.

வெபர் அடிகளாரின் திருவுருவச் சிலை திறப்பு விழாவுக்கு பிரதம அதிதிகளாக மாவட்ட செயலாளர் க. கருணாகரன், மறை மாவட்ட ஆயர் கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை ஆகியோர் கலந்துகொண்டு, அடிகளாரின் திருவுருவச் சிலையைத் திரைநீக்கம் செய்து, மெழுகுவர்த்தி ஏற்றியும் இறை ஆசியுடன் திறந்து வைக்கப்பட்டது.

அடிகாளாரின் சிலையை வடிவமைப்பு செய்த சிற்பக் கலைஞர் பத்மநாதன் கோபிதாஸ், பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# ஹட்டனில் 24 பேர் கைது

ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டனில் கடந்த 11 நாள்களாக முன்னெடுக்கப்பட்ட போதைப் பொருள் விசேட சுற்றிவளைப்பின் போது 24 பேர் போதைப் பொருள்களுடன் கைதுசெய்யப்பட்டனர்.

மத்திய மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரத்னவின் ஆலோசனைக்கு அமைய, ஹட்டன் சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி விஜித அல்விஸின் மேற்பார்வையின் கீழ் இந்த விசேட சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

ஹட்டன் பொலிஸ் போக்குவரத்து பிரிவினர் உள்ளிட்ட சகல பிரிவினரினதும் ஒத்துழைப்புடன் ஹட்டன்-நுவரெலியா பிரதான வீதி, ஹட்டன் பஸ் தரிப்பிடம் உள்ளிட்ட இடங்களில் விசேட சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

வாகனங்களில் பயணித்தோர், பொது போக்குவரத்து சேவைகளில் பயணித்தோர் ஆகியோரை சோதனைக்கு உட்படுத்தும் வகையில், ஒக்டோபர் மாதம் 25ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த விசேட சோதனை நேற்றும் (06) தொடர்ந்தது.

போதைப் பொருள்களுடன் கைது செய்யப்பட்ட 24 பேரும் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த உள்ளனர் என சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி விஜித அல்விஸ் தெரிவித்துள்ளார்.

### அடுத்த தேர்தலில்

# ‘அரங்கம்’ களமிறங்கும்

## முன்னாள் எம்.பி. திலகர் அறிவிப்பு

எஸ்.கணேசன்

மலையக மக்களின் அடையாளம் கருதி, அடுத்த தேர்தலில் மலையக அரசியல் ‘அரங்கம்’ போட்டியிடக்கூடிய சாத்தியம் அதிகம் உள்ளதென அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரும், நுவரெலியா மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம். திலகராஜ் தெரிவித்தார்.

அடுத்த தேர்தலில் மலையக அரசியல் ‘அரங்கம்’ நிச்சயம் போட்டியிடும். உள்ளூராட்சி, மாகாண மற்றும் பாராளுமன்ற தேர்தல்களில் போட்டியிடுமென தெரிவித்த அவர், ஏன் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றால்கூட அடையாளம் கருதி களமிறங்குவோம். வெற்றி, தோல்வியைவிட எமது மக்களின் அடையாளத்துக்காக போட்டியிடலாம். இளைஞர், யுவதிகளுடன் கைகோர்த்து அடுத்த தலைமுறைக்கான அரசியலை முன்னெடுப்போம் என்றார்.



ஹட்டனில் நேற்று (06) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மலையக கட்சிகளின் இணைவு என்பது, இப்போதைய தலைமுறைக்கு புதிய விடயமாக இருந்தாலும், எனது அரசியல் பயணத்தில் இதற்கு முன்னர் ஒற்றுமைகளை பல தடவைகள் பார்த்துள்ளேன். 1999இல் தொழிலாளர் தேசிய சங்கத்தின் ‘மயில்’ சின்னத்தில்தான் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் போட்டியிட்டது. இந்திய வம்வாவளி மக்கள் பேரணி என பெயரும் இடப்பட்டது. தற்போதைய தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர்கூட அந்த சின்னத்தில்தான் போட்டியிட்டு அரசியல் அறிமுகம் பெற்றார்.

1999 இல் ஏற்பட்ட இந்த ஒற்றுமைக்கு, 2009 இல் என்ன நடந்தது என்பது எமக்குத் தெரியும். அதேபோல் 2001 ஆம் ஆண்டு மல்லியப்பு சந்தியில் ஆறுமுகன் தொண்டமானும், சந்திரசேகரனும் ஒன்றிணைந்தார்கள். ‘இரு துருவங்கள் இணைவு’ என ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. தற்போது 2022 இல் இணைவு நடைபெறும்போது தற்போதைய மலையக மக்கள் முன்னணியின் தலைவர் எப்படியான கருத்தை வெளியிட்டுவருகின்றார் என்பது மக்களுக்குப் புரியும்.

இந்த ஒற்றுமை மக்கள் நலன் சார்ந்ததாக இருந்திருந்தால், விழாவுக்கு அழைத்து விருந்தினராக மாமன், மச்சான், தந்தை, மகன் என உறவு கொள்வதால் மக்களுக்கு எதுவும் நடக்கப்போவதில்லை. ஒரு வேலைத்திட்டம் முன்வைக்கப்பட்டு நடவடிக்கை இடம்பெறவேண்டும் என்றார்.








# உறுதிப்பத்திரம் கோரி ஆர்ப்பாட்டம்

1987ஆம் ஆண்டு முதல் கட்டப்பட்ட 37,000 பெருந்தோட்ட வீடுகளுக்கு சட்டரீதியான உறுதிப்பத்திரத்தை வழங்குமாறு கோரி, கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனத்தினரும் சில சிவில் அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் இணைந்து, நுவரெலியா பிரதான அஞ்சல் அலுவலகத்துக்கு முன்பாக நேற்று (06) ஞாயிற்றுக்கிழமை காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

(டி. சந்ரு)

### கால் துடைப்பானுக்குள் மறைத்து

# போதைப்பொருள் விற்றவர் கைது

ஷேன் செனவிரத்ன

கால் துடைப்பான் விற்கும் போர்வையில், போதைப்பொருளை விற்பனை செய்த ஒருவர், கண்டி ஊழல் ஒழிப்பு பிரிவினரால் தென்னகும்பர பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது சந்தேகநபரின் கால் துடைப்பான்கள் இருந்த பொதிக்குள் இருந்து 2,400 மில்லி கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டதாகவும் தமக்கு நன்றாக தெரிந்தவர்களுக்கு மாத்திரமே சந்தேகநபர் போதைப்பொருளை விற்பனை செய்து வந்துள்ளமையும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# புதிய தவிசாளர் உறுதி



துவாரகஷான்

சீரற்ற வானிலையால் மண்சரிவுக்கு உள்ளாகியுள்ள லிந்துலை, மெராயா பகுதியில் இருந்து எல்ஜின் தோட்டத்திற்கு செல்லும் பிரதான வீதியை விரைவில் புனரமைத்து தருவதாக அக்கரப்பத்தனை பிரதேச சபையின் புதிய தவிசாளர் ராமன் கோபாலகிருஷ்ணன் உறுதியளித்துள்ளார்.

குறித்த வீதியில் பாரிய வெடிப்புகள் ஏற்பட்டு மண் சரிவும் ஏற்பட்டுள்ளதால் அப்பகுதியில் வாழும் 150க்கும் மேற்பட்ட குடும்பங்களை சேர்ந்த 800 பேர் தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாமல் பெரும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர். அப்பகுதியிலும் நிலவும் சீரற்ற வானிலை காரணமாகவே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

அதேவேளை, அத்தோட்டத்துக்கு மின்சாரம் வழங்குவதற்காக நடப்பட்டுள்ள மின்கம்பங்களும் சரிந்து விழக்கூடிய அபாய நிலையில் உள்ளன.

### நுவரெலியா மாவட்ட சுகாதாரத்துறையில்

# உயர்பதவிகளுக்கான வெற்றிடங்கள் அதிகம்

ரஞ்சித் ராஜபக்ஷ

இலங்கையில் மந்தபோசனை நிலைமை அதிகரித்துக் காணப்படும் நுவரெலியா மாவட்டத்தின் சுகாதாரத்துறையில் நிர்வாக அதிகாரிகளின் உயர்பதவிகள் பலவற்றில் வெற்றிடங்கள் காணப்படுவதாக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கமைய, நுவரெலியா மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ், இரண்டு ஆரம்ப வைத்தியசாலைகளும் 26 பிரதேச வைத்தியசாலைகளும் மேலதிக ஆரம்ப வைத்தியசாலைகள் 12, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் 14 ஆகியவை நிர்வகிக்கப்படுகின்றன.

இந்த நிலையில், இந்த அலுவலகத்தின் சுகாதார சேவை பணிப்பாளர் பதவி, நிர்வாக அதிகாரி பதவி, கணக்காய்வு அதிகாரி போன்ற பதவிகளுக்கு தற்காலிக அதிகாரிகளே நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளவர்கள் மாவட்டத்தின் ஏனைய வைத்தியசாலைகள், மருத்துவ நிறுவனங்களில் கடமையாற்றுபவர்கள் என்றும் இதனால் இந்த அதிகாரிகளின் வேலைப்பளு அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் நுவரெலியா மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தில் பிரதி சுகாதார பணிப்பாளர் இல்லை என்றும் தற்போதைய நிலையின் கீழ் அந்த வெற்றிடத்துக்காகவேனும் நிரந்தரமாக அதிகாரியை நியமிக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென நுவரெலியா மாவட்ட வைத்தியர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



### இராமகிருஷ்ணனுக்கும்

# நட்டஈடு கேட்கிறது காங்கிரஸ்

ஆ.ரமேஸ்

டயகம கிழக்கு 03ஆம் பிரிவு தோட்டத்தில் மின்சாரம் தாக்கி பலியான தோட்டத் தொழிலாளியான இராமகிருஷ்ணனுக்கு, தோட்ட நிர்வாகம் இழப்பீடு வழங்க வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொழில் அமைச்சு,மற்றும் தொழில் ஆணையாளரைச் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான 45 வயதான குறித்த தொழிலாளி, தொழிற்சாலை உத்தியோகத்தரின் பணிப்பின் பேரில், அவருடைய விவசாய தோட்டத்திற்கு வேலைக்குச் சென்றுள்ளார். இதன்போது, தோட்டத்தில் பொருத்தப்பட்டிருநத மின்சார வேலியில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக காங்கிரஸின் பொதுச்செயலாளரும் எம்.பியுமான ஜீவன் தொண்டமான், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் உள்ளிட்ட குழுவினர், தொழில் திணைகளத்தின் ஆணையாளர் மற்றும் அக்கரபத்தனை பெருந்தோட்ட யாக்கத்தின் அதிகாரிகளையும் 5ஆம் திகதி சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது மின்சாரம் தாக்கி பலியான தோட்ட தொழிலாளிக்கு நட்டஈடு வழங்குவது தொடர்பாக இ.தொ.கா பல்வேறு விடயங்களை முன்வைத்துள்ளது.



### சீரற்ற வானிலையால்

# மரக்கறிகளின் விலைகள் அதிகரித்தன

ரஞ்சித் ராஜபக்ஷ

நாடு முழுவதும் கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் அடை மழையால் மரக்கறி உற்பத்தி பாரிய பாதிப்பை எதிர்நோக்கி உள்ளதாகவும் தற்போது நுகர்வோரின் தேவைக்கேற்ப மரக்கறிகளை வழங்க முடியாது இருப்பதாகவும் மரக்கறி உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், பெரிய வெங்காயம் கிலோ கிராம் 800 ரூபாய் வரை அதிகரித்துள்ளதுடன், கரட் 350 ரூபாயாகவும் கோவா 280 ரூபாய், போஞ்சி 450, தக்காளி 400 ரூபாயாகவும் அதிகரித்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

சிறியளவிலான மரக்கறிகளை பயிரிட்ட பெருமளவான விவசாயிகள், விவசாயத்தை கைவிட்டமையே மரக்கறிகளின் விலை அதிகரிப்புக்கு பிரதான காரணமென அகில இலங்கை பொருளாதார மத்திய நிலையங்களின் சங்கத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், சிறு விவசாயிகள் மரக்கறிச் செய்கையின் மூலம் வருமானம் ஈட்ட முடியாத காரணத்தால் சந்தையில் மரக்கறிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தற்போது ஏற்பட்டுள்ள மரக்கறி தட்டுப்பாடு எதிர்வரும் காலங்களில் கடும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்தார்.

# கட்டுபாட்டு விலையை மீறிய ‘கலர்’ முட்டைகள்

ரஞ்சித் ராஜபக்ஷ

முட்டையின் கட்டுப்பாட்டு விலையை மீறியுள்ளதாக ஹட்டன் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். வெள்ளை நிற முட்டையொன்று 54 ரூபாய்க்கும் பழுப்பு நிற முட்டை 55 ரூபாய்க்கும் விற்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் முட்டை பண்ணை உரிமையாளர்கள் முட்டையை சில்லறை விலைக்கு மேலதிகமாக தமக்கு விற்பனை செய்வதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

முட்டையின் விலை அதிகரித்துள்ளதால் நுகர்வோர் முட்டையை கொள்வனவு செய்வதை தவிர்த்து வருவதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஏனைய நான்களில் தமது வர்த்தக நிலையங்களுக்குத் தேவையான முட்டைகள், முட்டை பண்ணை உரிமையாளர்களால் விநியோகிக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது தமக்கு தேவையான முட்டைகள் கிடைக்காமை காரணமாக முட்டை விற்பனை குறைந்துள்ளது என்றனர்.





# தலவாக்கலை இளைஞன் கலஹாவில் படுகொலை

நவி

தெல்தோட்டை, லிட்டில்வெளி பிரதேச வீடொன்றுக்கு வருகை தந்திருந்த, தலவாக்கலையைச் சேர்ந்த 24 வயதான லெட்சுமனன் ராஜேந்திரன் என்பவர், இனம்தெரியா தவர்களால் 4ஆம் திகதி இரவு அடித்துக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

கலஹா, கிரேட்வெளி பிரதேசத்திலுள்ள தனது மனைவியின் வீட்டில் தங்கியிருந்து கூலித் தொழில் செய்துவரும் ஒரு பிள்ளையின் தந்தையான இவர், லிட்டில்வெளி பிரதேசத்தில் உறவினர் வீடொன்றில் நடைபெற்ற நிகழ்வுக்கு தனது மாமனாருடன் சென்றுள்ளார்.

**“ கிரேட்வெளி பிரதேசத்திலுள்ள மனைவியின் வீட்டில் தங்கியிருந்து தொழில் செய்துவரும் ஒரு பிள்ளையின் தந்தையே படுகொலை செய்யப்பட்டார்**

எனினும், அந்த வீட்டுக்கு அருகிலிருந்து காயங்களுடன் அவர் மீட்கப்பட்டுள்ளார். பின்னர், தெல்தோட்டை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும், உயிரிழந்துவிட்டார்.

சம்பவம் தொடர்பில் கலஹா மற்றும் கம்பளை பொலிஸார் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கால்நடை வளர்ப்பாளர்களின் கவலையை களையவும்

வடக்கு,கிழக்கு, மலையகம் உள்ளிட்ட கிராமபுறங்களைச் சேர்ந்த பல குடும்பங்கள், கால்நடை வளர்ப்பதை வாழ்வாதாரத் தொழிலாகச் செய்துவருகின்றனர். இன்னும் சிலர், பகுதி நேரமாகவும் மேலதிக வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்காகவும் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுவருகின்றனர்.

அதற்காக, அவர்கள் மாடாய் உழைக்கவேண்டும்; ஓடாய்த் தேயவேண்டும். இல்லையேல் ஓரளவுக்கேனும் வருமானத்தை திரட்டிக்கொள்ள முடியாத நிலைமையே ஏற்படும். கடும் சிரமங்களுக்கு மத்தியில் வளர்க்கப்பட்டு, மேய்ச்சலுக்கு விடப்படும்போது, இறைச்சியாக்கும் கும்பல்களால் பல கால்நடைகள் காவுகொள்ளப்படுகின்றன.

திருட்டுக் கும்பல்களில் கண்களுக்கு மண்ணை தூவிவிட்டாலும், இடி,மின்னல் உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களில் சிக்கி, இன்னும் சில கால்நடைகள் உயிரிழந்துவிடுகின்றன. மிருகங்களும் வேட்டையாடி விடுகின்றன.

கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரையில், ஒருவகையான நோய்த்தாக்கத்தில், ஒன்றரை வயது முதல் கர்ப்பமான மாடுகள், எருமை மாடுகள், பசு மாடுகள் என சுமார் 800க்கும் மேற்பட்டவை, கடந்த இரண்டு வாரங்களில் திடீரென உயிரிழந்துள்ளன. இவை ஒவ்வொன்றும் இலட்சக்கனக்கான ரூபாய் பெறுமதியானவை.

கால்நடைகளைப் பாதுகாத்து, வளர்த்தெடுத்து, அவற்றில் இருந்து குடும்பத்துக்கான வாழ்வாதாரத்தை திரட்டிக்கொள்வது என்பது இலகுவான காரியமல்ல. காலையில் இருந்து இரவு வரையிலும் மாடாய் உழைக்கவேண்டும். கண்காணித்து பாதுகாத்துக்கொள்ளவும் வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் கால்நடை வளர்ப்போரின் 'தலையில் இடி விழுந்தாற் போல' மேச்சலுக்கு விடப்பட்ட கால்நடைகள் வாயில் நுரையைத் தள்ளியவாறு மரணித்து கிடக்கின்றன. விலங்குகளுக்கு ஏற்படும் மாரடைப்பு காரணமாகவே, இவை திடீரென மரணிக்கின்றன என கால்நடை திணைக்களப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மீதமிருக்கும் கால்நடைகளை காப்பாற்றுவதற்காக, தடுப்பூசிகள் ஏற்றப்படுகின்ற போதிலும், சில மாடுகள் வாயில் நுரைத்தள்ளி, சுவாசிக்க முடியாமல் இறந்துவிடுகின்றன என கால்நடை வளர்ப்பாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தீவனத்தின் விலையேற்றம், கால்நடைகளை பராமரிப்பதற்கான செலவுகள், பாலுக்கு உரிய விலை கிடைக்காமை உள்ளிட்டவையால், பெரும் அவஸ்தைப்படும் கால்நடை வளர்ப்பாளர்கள், மாடுகள் இறப்பதால், பல இலட்சம் ரூபாய்களை இழந்து நிர்க்கதியாகியுள்ளனர்.

கால்நடைகளை வளர்ப்போர், அவ்வற்றிலிருந்து உடனடியாக ஆதாயத்தை திரட்டுவதில்லை. வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னரே, பல வழிகளிலும் செலவுகள் ஏற்படும். இந்தச் செலவுகளை எல்லாம் ஈடுசெய்வதற்கு, நீண்ட நாள்கள் எடுக்கும். நாளாந்தம் வயிற்றுப் பசியை போக்கிக்கொள்வதற்காக, வருமானத்தை ஈட்டித்தந்த கால்நடைகள் திடீரென உயிரிழந்தமையால், இந்தக் கால்நடை வளர்ப்பாளர்களால், தலையைத் தூக்கமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

அடுத்து என்ன செய்வது என சிந்திக்கவிடாத வகையில், திடீர் உயிரிழப்புகள் இடம்பெறுகின்றன. ஆகையால், உயிரிழந்த கால்நடைகளுக்கு நட்டஈடு வழங்குவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்வதுடன், மீதமிருக்கும் கால்நடைகளைக் காப்பாற்றிக்கொள்வதற்கான முன்னேற்பாட்டுத் திட்டங்களை வகுக்கவேண்டும் என்பதை நாம் வலியுறுத்துகின்றோம்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

தங்களுக்குரிய காரியங்களை மட்டும் செய்து, சமூகசேவைகள் எதையும் செய்யாதவர், ஆன்மிகம் பற்றிப் பேசுவதில் ஏது பயன்?

நற்செயல்கள் புரிந்தவர்கள் மௌனமாகிவிடுகின்றனர். ஆனால், எதுவுமே செய்யாதவர்கள், பொதுநலன் பற்றிப் பேசுவது வேடிக்கை. பொய்யான பிரசாரங்களை அள்ளி வீசுபவர்கள் சுயநலவாதிகள். இவர்களைக் கண்டுகொள்ள வேண்டாம்.

தேசத்துக்கு தியாகம் செய்கின்றோம் என்று சொல்லியே தலைவராகி விடுகின்றவர்கள், சாதாரண தொழிலாளி செய்கின்ற பணிகளைக் கூட செய்கின்றார்களா?

கஷ்டப்பட்டே வாழ வேண்டும் என்ற விதி நிரந்தரமாகிவிடக்கூடாது. எனினும் இன்னமும் ஏழ்மை முடிவுக்கு வரவே இல்லை.

விலைவாசிகள் அதிகரிக்க இன்று பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. சில பணக்காரர்கள் ஏழைகளுக்கு உதவிபுரிந்துள்ளார்கள். ஆனால், அவர்கள் அதை வெளியில் காட்டிக்கொள்வதில்லை. இவர்களைப் போன்றவர்கள், இரக்கப்படுவதில் உறுதியானவர்கள். சொல்லாமல் செய்வோர் நல்லோர்.

தொண்டு நிறுவனங்களுக்கு பலவிதமான உதவிகளை சாதாரண மக்களும் நல்குகின்றனர். வியாபாரிகள் பொருட்களைப் பதுக்காமல் இருந்தாலே போதும்; அதுவே பெரிய உதவி. பேராசையுடன் பொருட்களைத் தேடுபவர்கள், மற்றவர்களின் நிலைகளை உணரவேண்டும். எல்லோரும் வாழவேண்டும். வையகம் எமக்கானது மட்டுமல்ல; உணர்வார்களா?

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வவுனியா வீதிகளில்

## கட்டாக்காலிகளால் போக்குவரத்துக்கு இடையூறு

வவுனியா நகரசபை மற்றும் பிரதேச சபைக்கு உட்பட்ட வீதிகளில் மக்கள் போக்குவரத்து மேற்கொள்வதில், கட்டாக்காலி மாடுகளால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள்.

மழை ஆரம்பித்துள்ள நிலையில் நெளுக்குளம், பட்டாணிச்சூர், வேப்பங்குளம், குளுமாட்டுச்சந்தி, பூந்தோட்டம், வவுனியா நகர் போன்ற பல்வேறு பகுதிகளில், இரவு மற்றும் காலை வேளைகளில் கட்டாக்காலி மாடுகள் நடு வீதிகளில் படுத்துறங்குவதால், போக்குவரத்து செய்வோர் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதன் காரணமாக விபத்துகள் ஏற்பட்டு, கடந்த காலங்களில் பலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

எனவே, கட்டாக்காலி மாடுகளை பிடித்து, போக்குவரத்துகளை இடையூறுகள் இன்றி மேற்கொள்வதற்கு உதவி செய்யுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

க. அகரன்



### நவம்பர் –02 உள்ளிட்ட

# போராட்டங்கள் எதற்காக?



என்.கே அஷோக்பரன்
Twitter: @nkashokbharan

வரலாறு காணாத மக்கள் எழுச்சியை இலங்கை சந்தித்து, அதன் வாயிலாக, 2019 நவம்பரில் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ, வெறும் இரண்டரை ஆண்டு பதவிக்காலத்துக்குள் பதவி விலகியமை, பெரும் வரலாற்று நிகழ்வு. இதில் எந்த மாற்றுக்கருத்தும் இருக்க முடியாது.

இந்த மக்கள் எழுச்சிக்கான காரணம், இலங்கை சந்தித்து நின்ற வரலாறு காணாத பொருளாதார வீழ்ச்சியும் அதன் விளைவாக மக்களால் தம் அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவேற்ற முடியாத நிலை உருவானதுமாகும்.

எரிபொருள் பற்றாக்குறை; அதன் விளைவாக மின்சாரத் தடைகள் எனபன, இலங்கையை ஸ்தம்பிக்கச் செய்திருந்தன. எதிர்காலம் பற்றிய அச்சம் ஒருபுறமும் நிகழ்கால வாழ்வைக் கொண்டு நடத்துவதற்கான சவால்கள் இன்னொருபுறமுமாக மக்கள் கலங்கிப்போயிருந்த நிலையில், பல மாதங்களாக எதுவித முன்னேற்றமும் இல்லாமையால், 'இது போதும்' என மக்கள் தொடர் போராட்டங்களில், தாமாக முன்வந்து, அதாவது அரசியல் கட்சிகள், அமைப்புகளின் அழைப்புகள் இல்லாமல், வீதிக்கு இறங்கி, மிக அமைதியான முறையில் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு எதிரான தமது எதிர்ப்பை, தொடர்ந்து பதிவு செய்தனர்.

இந்த மக்கள் எழுச்சியை, தமக்கு சாதகமாக்கிக்கொள்ள முனைந்த, அதுவரை காலமும் வங்குரோத்து அரசியலை முன்னெடுத்து வந்த இடதுசாரி அரசியல் கட்சிகள், மக்கள் போராட்டத்துக்கு உரிமை கோரத்தொடங்கினார்கள். அதுவரை காலமும் மிக அமைதியான முறையில் இடம்பெற்று வந்த மக்கள் பேராட்டங்களுக்குள் வன்முறையைக் கொண்டு வந்தவர்கள், இந்த இடதுசாரி மாக்ஸிஸவாத சக்திகள்தான்.

எது எவ்வாறாயினும், மக்கள் எழுச்சி என்பது கோட்டாவின் பதவி விலகலை வேண்டியே இடம்பெற்றது. அதற்குள் 'சிஸ்டம் சேன்ஞ்' என்று, தமது நிகழ்ச்சி நிரலை நுழைக்க, இடதுசாரிகள் பகீரதப் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் கோட்டா பதவி விலகியபின், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகியவுடன், அவருக்கு கால அவகாசம் தந்து, அவராவது இந்த நிலையிலிருந்து இலங்கையை மீட்பாரா என்று மக்கள் காத்திருக்க விரும்பினாலும், இந்த இடதுசாரிகளுக்கு எண்ணம் அதில் இல்லை.

அவர்களைப் பொறுத்தவரையில், அவர்களது சுயநல அரசியலுக்கு நாடு இதைவிட மோசமான நிலையை அடையவேண்டும். நாட்டின் பொருளாதாரம் அதல பாதாளத்தில் விழுந்தே கிடக்க வேண்டும்; அதனை எவரும் மீட்டுவிடக் கூடாது. அப்படியானால்தான் அடுத்த தேர்தலில் தாம் இன்னும் கொஞ்ச ஆசனங்களையேனும் வெல்ல முடியும். இதுதான் இந்த இடதுசாரி சக்திகளின் கணக்கு!

இதற்கு அழகான வார்த்தைகளில், நிறைய வியாக்கியானங்களை அவர்கள் முன்வைப்பார்கள். இடதுசாரிகளின் இந்தப் போலி முகத்துக்கு மிகப் பெரிய உதாரணம், வருமான வரி அதிகரிப்புக்கு இன்று அவர்கள் காட்டும் எதிர்ப்பு. இவ்வளவு காலமும், வருமான வரி அதிகரிக்கப்பட வேண்டும்; இலங்கையில் வருமான வரி அறவீடு குறைவாக இருக்கிறது என்று குரல் கொடுத்து வந்தவர்கள், இன்று ரணில் விக்கிரமசிங்க வருமான வரிகளை அதிகரித்த பின்னர், அதற்கு எதிராகக் குரல் கொடுக்கிறார்கள்.

மறுபுறத்தில், இலங்கையை இந்தப் பொருளாதார சரிவிலிருந்து மீட்டெடுக்க சர்வதேச நாணய நிதியத்தின் பொறிமுறையை நாடுவதையும் இடதுசாரிகள் கடுமையாக எதிர்க்கிறார்கள். சர்வதேச நாணய நிதியத்தின் பொறிமுறையை நாடக்கூடாது என்ற கொள்கையைக் கொண்டிருந்து, அதனால் நாட்டை மிக மோசமான பொருளாதார நிலைக்குத் தள்ளிய கோட்டாவையும் அவரது அரசாங்கத்தையும் இதே இடதுசாரிகள் எதிர்க்கிறார்கள். யோசித்துப் பார்த்தால் எதிர்ப்பது மட்டும்தான் ஜே.வி.பி உள்ளிட்ட இந்த இடதுசாரிகள் வேலையாக இருந்திருக்கிறது.

ஜே.வி.பி என்பது 2001-2003 காலப்பகுதியில் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு எதிராக, மிகப்பெரும் இனவாதப் பிரசாரத்தை முன்னெடுத்து, சமாதான முயற்சிகளைச் சீரழித்தது. வடக்கு-கிழக்கு இணைப்புக்கு எதிராக உயர்நீதிமன்றம் சென்று, வடக்கு-கிழக்கை பிரித்ததும் இதே ஜே.வி.பிதான். தமது இனவெறிப் பிரசாரத்தால், மஹிந்த ராஜபக்ஷவைப் பதவிக்கு கொண்டு வந்துவிட்டு, பிறகு மஹிந்த ராஜபக்ஷவோடு முரண்பட்டு, பிரிந்து வந்தார்கள். இவர்ளைப் பொறுத்தவரையில், கொள்கை என்று பேசுவதில், 'வாய்ச்சொல் வீரர்'களேயன்றி, இவர்கள் மிகப்பெரும் சந்தர்ப்பவாதிகள்.

மனித உரிமை என்று பேசுவார்கள்; பல்கலைக்கழகங்களில் மாணவர்களின் உயிர்களைப் பறிக்கும் காட்டுமிராண்டி நடவடிக்கையான பகிடிவதைக்கு எதிராக ஒருவார்த்தை கூடப் பேச மாட்டார்கள். ஏனென்றால், பகிடிவதைதான் இடதுசாரிகளுக்கான ஆட்சேர்ப்புக்கான வழிகளில் முக்கியமானது. இலங்கையின் பல்கலைக்கழகங்களைச் சீரழித்தவர்கள் இந்த இடதுசாரிகள்தான்.

இலங்கையின் ஆடைத் தொழிற்றுறையையும் அழித்தவர்கள் இவர்கள்தான். இலங்கையின் முன்னணி ஆடை நிறுவனங்கள், தமது தொழிற்சாலைகளை இலங்கையிலிருந்து பங்களாதேஷ், வியட்நாம் என்று இடம்மாற்ற பிரதான காரணம் இந்த இடதுசாரி அரசியல்தான். கடைசியில் இழப்பு நாட்டுக்கானது.

தொழிலாளர், தொழிற்றுறை பற்றி ஜே.வி.பி நிறையப் பேசினாலும், அது மலையக தோட்டத் தொழிலாளர் பற்றி எல்லாம் அதிகமாகப் பேசுவதில்லை. வடக்கு-கிழக்கு மக்கள், அவர்களின் நிலை பற்றிப் பேசுவதில்லை. ஏனென்றால் அடிப்படையில் ஜே.வி.பியின் அரசியல் என்பது பெருந்தேசியவாத, இனவாத அரசியல்; இதற்கு வரலாறு சாட்சி.

மஹிந்த ராஜபக்ஷர்களைவிட மிகப்பெரிய இனவாதிகள் ஜே.வி.பியினர்தான் என்பதை 1990களின் பிற்பகுதியிலிருந்து தெற்கில் வசித்த தமிழர்கள் நன்கறிவர்.

இன்று இலங்கையில் இடம்பெற்ற பெரும் மக்கள் எழுச்சியை, தமக்கான அரசியலாக மாற்றிக்கொள்ளத்தான் இந்த இடதுசாரிக் கூட்டம் இன்றுவரை தொடர் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறது. இதற்கு தலைகால் புரியாத, தாம் எப்படியும் அடுத்த முறை ஆட்சியைப் பிடித்துவிட வேண்டுமென அங்கலாய்ப்பில் காத்திருக்கும் 'பிரதான' எதிர்க்கட்சிகள் ஆதரவு வேறு வழங்குகிறார்கள்.

ஆனால், தமது போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் 'பிரதான' எதிர்க்கட்சிகளுக்கு தாம் வழங்கும் மரியாதை என்ன என்பதை, ஜூலையில் சஜித் பிரேமதாஸ தாக்கப்பட்டதன் மூலமும், நவம்பர் இரண்டாம் திகதி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வந்த சஜித் பிரேமதாஸ 'ஹூ' அடித்து விரட்டப்பட்டதன் மூலமும், இடதுசாரிகள் தெளிவாக உணர்த்தியிருக்கிறார்கள்.

ஆனால், சின்னப்பிள்ளைத்தனமான இந்தப் 'பிரதான' எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கு, இது இன்னமும் விளங்கவில்லை. இதற்கு நடுவில், இந்தக் கட்சிகளின் சில கோமாளி அரசியல்வாதிகள், தம்மைப் பெரும் போராட்டக்காரர்களாகக் காட்ட முன்னரங்கில் இறங்கி, பொலிஸாருடன் சண்டையிட்டு, அதன்மூலம் அரசியல் இலாபம் காண விளைகிறார்கள்.

நவம்பர் - 02 போராட்டம் கூட, பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்கு எதிரான போராட்டமாம். நல்லது!

ஆனால், அவர்களது பிரதான கோரிக்கை, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சில மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஒன்பது வருடமாக பல்கலைக்கழகத்தில் மாணவனாக இருந்து கொண்டு, மக்கள் வரிப்பணத்தை வீணடித்துக்கொண்டிருக்கும் வசந்த முதலிகேயும், இடதுசாரிகளின் பிக்கு மாணவர் அமைப்பைச் சார்ந்த ஸ்ரீதம்ம தேரரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதுதான்.

பல்லாண்டுகளாக இதே பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் பற்றி முன்னரங்கில் பேசமாட்டார்கள். இதுதான் இந்த இனவாத ஜே.வி.பி மற்றும் பெரடுகாமியின் உண்மை முகம். இதற்குத்தான் சில தமிழர்களும் பெரும் ஆதரவளித்து வருகிறார்கள்.

இதில் சிலர், தம்முடைய அரசியல் வாழ்வுக்கான ஓர் உந்து சக்தியாக, இந்தப் போராட்டங்களைப் பயன்படுத்த விரும்புகிறார்கள் என்பது அவர்களது நடவடிக்கைகளில் இருந்தே தெரிகிறது. இந்தப் போராட்டம் மூலம் கிடைக்கும் பிரபல்யத்தை, அரசியல் மூலம் அறுவடை செய்யலாம் என்பது அவர்கள் கணக்கு!

இப்படியாக எல்லாச் சுயநல கோஷ்டியும் ஒன்று சேர்ந்து, இலங்கையின் பொருளாதார மீட்சியை தடுப்பதற்காக பகீரதப் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு, தாம் மக்கள் நலனில் பெரும் அக்கறையுள்ளவர்களாகக் காட்டிக்கொள்ளும் பேச்சுகள் வேறு!

நாட்டின் பொருளாதார மீட்சிதான், அனைவரையும் வாழவைக்கும். மீட்சிக்கான பயணம் கடினமானது. அதை இலங்கை சந்தித்தே ஆக வேண்டும். மந்திரத்தால் மாங்கனிகள் வீழ்வதில்லை. போராட்டங்களால் பொருளாதாரம் வளர்வதில்லை. இதனை இலங்கை மக்கள் புரிந்துகொண்டதால்தான், கோட்டாவை விரட்ட மக்கள் தாமாகவே திரண்டு வந்ததைப்போல, இந்த இடதுசாரிகளின் சுயநல போராட்டங்களுக்கும் மக்கள் வருவதில்லை.

யூனியன் அஷ்யூரன்ஸ்:

# வருட மத்தி விநியோக விருதுகள் 2022

யூனியன் அஷ்யூரன்ஸ் தனது வருட மத்தி விநியோக விருதுகள் 2022 நிகழ்வை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது. முகவர் மற்றும் கூட்டாண்மை பிரிவுகளில் சிறப்பாக செயலாற்றியிருந்தவர்களை கௌரவிக்கும் வகையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இரு பிரிவுகளையும் சேர்ந்த 450 க்கும் அதிகமான ஆலோசகர்கள், கணக்கு முகாமையாளர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர். இந்நிகழ்வு வாத்துவ, 'ப்ளூ வோட்டர்' ஹோட்டலில் நடைபெற்றது.

பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுட் கோம்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், "இந்த ஆண்டு எம் அனைவருக்கும் நெருக்கடிகள் நிறைந்ததாக அமைந்துள்ளது. சந்தைச் சூழல்களில் பல தடைகள் எழுந்த போதிலும், முதல் அரையாண்டு காலப்பகுதியில் நிறுவனம் முன்நோக்கி நகர்ந்திருந்ததுடன், பல்வேறு பிரிவுகளில் முன்னேற்றங்களை அவதானித்திருந்தது. இந்த முன்னேற்றங்களை எய்துவதற்கு எமது ஆலோசகர்கள் முக்கிய பங்களிப்புகளை வழங்கியுள்ளனர். எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த பெறுமதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு அப்பால் சென்று, நிதியளவில் பாதுகாப்பாகத் திகழ்வதற்கு உதவும் வகையில் இயங்குகின்றமைக்காக எமது சகல ஆலோசகர்களின் அர்ப்பணிப்பான செயற்பாடுகளுக்கும் நன்றி தெரிவிக்கின்றேன்" என்றார்.

சிலாபம் பிராந்தியத்தின் சானக அப்புஹாமிக்கு, 'தேசிய புதிய வியாபார சம்பியன்' எனும் உயர்ந்த விருது முகவர் பிரிவில் வழங்கப்பட்டது.




கூட்டாண்மை நாளிகை புதிய வியாபார சம்பியன்' வெற்றியாளராக பிரனீத் விமலசிறி தெரிவு செய்யப்பட்டிருந்தார். கயான் பண்டாரவின் தலைமைத்துவத்தின் கீழ் வோட் பிளேஸ் பிராந்தியம் சிறந்த பிராந்தியத்துக்கான விருதை சுவீகரித்தது. யோகநாதன் லட்சுமிஹரன் தலைமையில் இயங்கும் கிழக்கு வலயம், சிறிய நடுத்தரளவு பிரிவில் சிறந்த வலயத்துக்கான விருதை பெற்றுக் கொண்டது. பாரிய பிரிவில் சிறந்த வலயத்துக்கான விருதை வட வலயம் பெற்றுக் கொண்டது.

பிரதம விநியோக அதிகாரி செனத் ஜயதிலக கருத்துத் தெரிவிக்கையில், "2022ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் சிறந்த செயற்பாடுகளை பதிவு செய்திருந்தமைக்காக எமது அணியினர் தொடர்பில் பெருமை கொள்கின்றேன். நிபுணத்துவம் மற்றும் சிறந்த சேவை போன்றவற்றின் அடிப்படையில், எமது ஆலோசகர்கள், கணக்கு முகாமையாளர்கள் ஆகியோர் வழிநடத்தப்படுகின்றனர். அவற்றினூடாக எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவைகளைப் பெற்றுக் கொடுக்க முடிந்துள்ளது. மேலும், சகல ஆலோசகர்களுக்கும் எமது நவீன பயிற்சிகளினூடாக தமது திறமைகளை மேம்படுத்திக் கொண்டு, தமது தொழில் நிலைகளில் முன்னேறுவதற்கான வாய்ப்பை வழங்கும் கலாசார முறைமை எமது நிறுவனத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எமது வெற்றிகரமான செயற்பாடுகளில், ஆலோசகர்கள் முக்கிய அங்கமாக அமைந்துள்ளனர் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளதுடன், அவர்கள் தொடர்ந்து தம்மை விருத்தி செய்து, சிறந்த வெற்றிகரமான சாதனையை எய்தச் செய்யும் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதில் நாம் எப்போதும் கவனம் செலுத்துகின்றோம். அத்துடன், தொழிற்றுறையில் எமது வாடிக்கையாளர்களுக்கு ஒப்பற்ற சேவையை பெற்றுக் கொடுப்பதிலும் பங்களிப்பு வழங்குகின்றோம்" என்றார்.

# வீட்டுத்தோட்டச் செய்கைக்கு முக்கியத்துவம் அளிக்கும் 'செலான் டிக்கிரி'

'செலான் டிக்கிரி', தேசத்தின் சிறுவர்களுக்கு களிப்பூட்டும், புத்தாக்கமான அம்சங்கள் நிறைந்த மாதமாக கொண்டாடியது. இதற்காக பல சலுகைகளையும் வழங்கியிருந்தது. தொடர்ச்சியாக 10ஆவது வருடமாக 'செலான் டிக்கிரி' உலக சிறுவர் மாதத் திட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், ஏற்கெனவே காணப்படும் மற்றும் புதிய சிறுவர் சேமிப்புக் கணக்குகளில் 2022 ஒக்டோபர் 1 முதல் 31 வரையான காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்படும் வைப்புகளுக்கு விசேட சலுகைகளை வழங்கியிருந்தது.

பணவீக்கத்தின் தாக்கத்தை கவனத்தில் கொண்டு, அதிகரித்துச் செலவும் வாழ்க்கைச் செலவைக் குறைத்துக் கொள்வதற்காக பல இல்லங்களில், வீட்டுத்தோட்டச் செய்கையை மேற்கொள்வதை செலான் வங்கி இனங்கண்டிருந்தது. இந்தக் காரணிகளை கவனத்தில் கொண்டு, இந்த மாதத்தில் 'செலான் டிக்கிரி'யால் வழங்கப்படும் கொடுப்பனவுகளினூடாக, சிறுவர்களிடத்தில் பயிர்ச் செய்கை தொடர்பான புதிய சிந்தனைகளை வெளிக் கொண்டுவருவதை ஊக்குவிப்பதாக அமைந்திருந்தது.

இந்த நற்பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில், புதிய அல்லது ஏற்கெனவே காணப்படும் 'செலான் டிக்கிரி' கணக்கினுள் ரூ. 25,000/- வைப்புச் செய்யப்படும் போது, கணக்குதாரருக்கு, வீட்டுத்தோட்டச் செய்கைக்கான பொதி ஒன்று வழங்கப்பட்டது. இதில் இரண்டு அத்தியாவசிய சாதனங்கள், கையுறைகள், வளர்ப்பு பொதிகள், விதைகள் போன்றவற்றுடன், டிக்கிரி வீட்டுத் தோட்ட போட்டியில் இலவசமாக பங்குபற்றும் வாய்ப்பு போன்றன அடங்கியிருந்தன. 12 வயது வரையான சிறுவர்களுக்கு இந்தத் திட்டத்தினூடாக ரூ. 500,000/- வரை பரிசுகளை வெற்றியீட்டக் கூடியதாக இருந்தது.

புதிய கணக்கொன்றில் ரூ. 100,000/- வைப்புச் செய்யப்படும் போது, மேற்படி வீட்டுத்தோட்டச் செய்கைப் பொதியைப் பெறுவதற்கும், அன்பளிப்பு வவுச்சர்கள் மற்றும் மேலதிக அன்பளிப்பு போன்றவற்றை பெறும் வாய்ப்பை கணக்குதாரர்கள் பெற்றுக் கொண்டனர். அதேவேளை, ஏற்கெனவே காணப்படும் அல்லது புதிய கணக்கில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு புதிய ரூ. 5,000/- வைப்புக்கும், கணக்குதாரருக்கு, டிக்கிரி வீட்டுத் தோட்டச் செய்கைப் போட்டியில் பங்கேற்பதற்கான வாய்ப்பு மாத்திரம் வழங்கப்பட்டது.

மேலதிகமாக, 'செலான் டிக்கிரி', புகழ்பெற்ற வர்த்தக நாமங்களான 'அட்லஸ்', 'CIB', 'Bata', 'லுமாலா' ஆகியவற்றுடன் இணைந்து கணக்குதாரர்களுக்கு விலைக்கழிவு கூப்பன்களையும் வழங்கியிருந்தது.

'செலான் டிக்கிரி'யால் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் தொடர்பில் செலான் வங்கியின் விற்பனைகள் மற்றும் சந்தைப்படுத்தல் உதவி பொது முகாமையாளர் காமிக டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், "உலக சிறுவர்




தினத்தை கொண்டாடுவதற்கு ஒரு நாளை மாத்திரம் ஏனையவர்கள் அர்ப்பணித்திருக்கும் நிலையில், செலான் வங்கியைச் சேர்ந்த நாம், முழு மாதத்தையும் அடுத்த தலைமுறைக்காக ஒதுக்கி, கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக கொண்டாடி வருகின்றோம். இந்த ஆண்டில், வீட்டுத் தோட்டச் செய்கையில் சிறுவர்களை ஈடுபடுத்த ஊக்குவிக்க நாம் தீர்மானித்தோம். எந்தவொரு சூழ்நிலையிலும் சிறந்ததை எய்துவதற்கு அவர்களுக்கு பயிற்றுவிப்பதாக அமைந்திருக்கும் என்பதுடன் தமது பெற்றோருடன் பிணைப்பை ஏற்படுத்தும் அனுபவமாகவும் அமைந்திருக்கும். எமது வருடாந்த முயற்சிகளினூடாக இதனை நாம் சிந்திப்பதுடன், அடுத்த தலைமுறையினருக்காக சிறந்த உலகை உருவாக்குவதை அனைவரும் சிந்திக்க செலான் வங்கி நினைவூட்டுவதாக அமைந்துள்ளது" என்றார்.

கடந்த 30 வருடங்களாக பொறுப்பு வாய்ந்த வர்த்தக நாமம் எனும் வகையில், செலான் டிக்கிரி'யால் சிறுவர்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் இதுபோன்ற பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. காலப்பகுதிக்கு பொருத்தமான திட்டங்களை அறிமுகம் செய்து, ஈடுபாட்டுடன் செயற்பாடுகளையும் முன்னெடுத்து, வர்த்தக நாமம் சிறுவர்களுடன் நெருக்கமான தொடர்பை பேணி வருகின்றது.

இமாச்சல பிரதேசம்

# முதல் வாக்காளர் காலமானார்

சுதந்திர இந்தியாவின் முதல் வாக்காளர் ஷ்யாம் சரண் நெகி தனது 106 ஆவது வயதில் நேற்று முன்தினம் (05) உடல் நலக் குறைவால் காலமானர்.

1917ஆம் ஆண்டு இமாச்சல பிரதேசம், கின்னாவூர் என்ற இடத்தில் நெகி பிறந்துள்ளார். இவர் பிறந்த போது இந்தியா பிரித்தானியாவின் ஆட்சியின் கீழ் இருந்தது.

இந்நிலையில் 1947இல் இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. அதன் பிறகு 1951-52இல் முதன் முதலாக சுதந்திர இந்தியா தேர்தலை நடத்தியது. அத் தேர்தலில் வாக்களித்த முதல் வாக்காளர் ஷ்யாம் சரண் நெகி தான்.



இந்தியாவின் மற்ற இடங்களில் 1952ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தேர்தல் வாக்களிப்பு நடைபெற்றது. ஆனால் இமாச்சல பிரதேசத்தில் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் கடும் குளிரும், பனிப்பொழிவும் ஏற்படும் என்ற காரணத்தால், ஐந்து மாதங்களுக்கு முன்னதாக, ஒக்டோபர் மாதம் தேர்தல் நடத்தப்பட்டது.

அதில் முதல் நபராக வாக்களித்தவர்தான் நெகி. அவர் வாக்களித்த திகதி அக்டோபர் 25 1951. அன்று முதல் இந்தியாவில் நடைபெற்ற அனைத்து தேர்தல்களிலும் தவறாமல் வாக்களித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது,

இந்நிலையில் உரிய மரியாதையுடன் ஷ்யாம் சரண் நெகிக்கு இறுதிச் சடங்கு நடைபெறும் எனவும், அதற்கான ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகம் செய்து வருவதாகவும் கின்னாவுர் மாவட்ட ஆட்சியர் பித் ஹுசைன் தெரிவித்தார்.

பெங்களூர்

# வைரலாகும் ஓட்டோ

பெங்களூரைச் சேர்ந்தவர் ராஜேஷ். ஓட்டோ சாரதியான அவர், பெங்களூர் மக்களின் அபிமானத்தை வென்ற நபராக வலம் வருகின்றார்.

தமது வாடிக்கையாளர்களை அவர் நடத்தும் விதமே, மக்கள் மத்தியில் அவர் பிரபலமடையக் காரணமாக உள்ளது.

ராஜேஷ் தனது ஓட்டோவில் பயணிக்கும் வாடிக்கையாளர்களின் பயன்பாட்டுக்காக, சாரதி இருக்கைக்கு பின்னால், முதலுதவிக்கான சாதனங்கள், மாத்திரை, விக்ஸ், பிஸ்கட், சொக்லேட், சானிடைசர், தண்ணீர் போத்தல்கள் உள்ளிட்ட பல பொருட்களை வைத்துள்ளார்.

இது குறித்து ராஜேஷ் கருத்து தெரிவிக்கையில், "வாடிக்கையாளர்களின் திருப்தி தான் எனக்கு முக்கியம்" எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அவரது ஓட்டோவில் பயணித்த நபர் ஒருவர் இது குறித்து இணையத்தில் வீடியோயைப் பதிவிட்ட நிலையில் அது வைரலாகத் தொடங்கியுள்ளது.

அத்துடன் அவரது வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சத்தீஸ்கர்

# பாம்பை பலியெடுத்த சிறுவன்



எட்டு வயது சிறுவனொருவன் தன்னைக் கடித்த பாம்மை, பலியெடுத்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சத்தீஸ்கரைச் சேர்ந்த தீபக் என்ற சிறுவனை, நாகப்பாம்பொன்று அண்மையில் தீண்டியுள்ளது.

இதைச் சற்றும் எதிர்பாராத அச்சிறுவன், ஆத்திரமடைந்து அப்பாம்மை இரண்டு முறை கடித்துள்ளான். இதில் அப்பாம்பு இறந்துள்ளது. இதனையடுத்து, அச்சிறுவனை உடனடியாக, அப்பகுதியில் உள்ளவர்கள் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் இது குறித்து மருத்துவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், "சிறுவனைப் பாம்பு தீண்டியபோது, அதிர்ஷ்டவசமாக விஷம் வெளியேறவில்லை. ஆனால், இதுபோன்ற பாம்புக் கடி வலி நிறைந்தவையாக இருக்கும். பாம்பு தீண்டிய பகுதியைச் சுற்றி மட்டுமே அறிகுறிகள் இருக்கும்" என்றனர்.

புதுடெல்லி

# டீசல் வாகனங்களுக்குத் தடை

புதுடெல்லியில் காற்றின் தரம் மிகவும் மோசமடைந்து வருகின்றமை காரணமாக புதுடெல்லியின் பலபகுதிகளில் பனிமூட்டம் போன்று தூசித் துகள்கள் நிறைந்து காணப்படுகின்றன.

இதனால், மாசு நிறைந்த காற்றையே தினமும் சுவாசித்து வருவதாகவும், போக்குவரத்தை மேற்கொள்வது மிகவும் சிரமமாக உள்ளது எனவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், காற்று மாசு அதிகரிப்பதைத் தடுக்க அரசு தீவிர நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

அந்தவகையில், டீசலில் இயங்கும் வாகனங்கள் நுழைவதற்கு புதுடெல்லியில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து புதுடெல்லி போக்குவரத்துத்துறை பிறப்பித்த உத்தரவின்படி, அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிச் செல்லும் அல்லது அத்தியாவசிய சேவைகளை வழங்கும் வாகனங்களைத் தவிர, வேறு எந்த டீசல் வாகனங்களும் புதுடெல்லிக்குள் நுழைய அனுமதிக்கப்படாது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கோவா

# போதையேற்றும் தேநீர்: படையெடுக்கும் மக்கள்

புகழ்பெற்ற சுற்றுலா தலங்களை அடுத்து, கோவா என்றால் பலரின் நினைவுக்கு வருவது மதுபானங்கள் தான்.

எனினும், தற்போது சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கமாக, கோவாவில், பொது வெளியில் மதுபானம் அருந்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மீறினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கோவாவில் உள்ள தேநீர் கடையொன்றில் புதிய முயற்சியாக 'ரம்' பயன்படுத்தி தேநீர் தயாரிக்கப்படுகின்றது.

கோவாவிலுள்ள காண்டோலிமில் உள்ள சின்க்வெரிம் பீச்சுக்கு அருகில் உள்ள சாலையோர கடையிலேயே 'Old Monk



Tea' எனப்படும் இத்தேநீர் தயாரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த தேநீருக்கு பெரும்பாலான மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பு கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இத்தேநீரை ஒரு முறையாவது சுவைத்துப் பார்க்கவேண்டும் எனப் பலர் குறித்த தேநீர் கடைக்கு படையெடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




சிலி

# பட்டப்பகலில் கொள்ளையடித்த கிளி

தென்அமெரிக்க நாடான சிலியின் சான்டியகோ பகுதியில் ஊடகவியலாளர் ஒருவர் அப்பகுதியில் திருட்டு சம்பவங்கள் அதிகரித்து வருவதாக நேரலையில் தெரிவித்துக் கொண்டிருந்தார்.

அப்போது, பறந்து வந்த ஒரு கிளி அவரது தோள்பட்டையில் அமர்ந்தது. இதன்போது குறித்த ஊடகவியலாளர், “பாதுகாப்பு நிறைந்த இந்த பகுதியில்...” என்று சொல்லும் போதே, அக்கிளி அவர் மாட்டியிருந்த



‘இயர்பேடை’ கௌவிக் கொண்டு பறந்தது.

இதனால், அதிர்ச்சியடைந்த ஒளிப்பதிவாளர்கள் அந்தக் கிளியை பிடிக்க முயற்சித்த போது, கிளி இயர்பேடோடு பறந்து சென்றது.



கென்யா

## வறட்சியால் 205 யானைகள் உயிரிழப்பு

கென்யாவில் கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடுமையான வறட்சி நிலவி வருகின்றது.

இதன்காரணமாக அம்போசெலி, சம்புரு, டைட்டா டிவிட்டா பகுதிகளில் உள்ள காடுகளில் வாழும் விலங்குகள் தண்ணீர் இன்றி உயிரிழந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், கடந்த ஒன்பது மாதங்களில் சுமார் 205 யானைகள் உயிரிழந்துள்ளதாக கென்யா அரசு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

இது உலக நாடுகள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் காட்டுப் பகுதியில் விலங்குகளுக்கு தண்ணீர் மற்றும் உணவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கென்ய அரசு தெரிவித்துள்ளது.

ரஷ்யா

## 13 பேரின் உயிரைப் பறித்த கேளிக்கை விடுதி

கோஷ்ட்ரோமா சிட்டியில் ஒல்கா நதிக்கரையில் உள்ள இரவு கேளிக்கை விடுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு (05) திடீரென தீ விபத்தொன்று ஏற்பட்டுள்ளது.

இவ்விபத்தால் குறித்த விடுதியின் மேற்கூரை சரிந்து விழுந்துள்ளது.

இதில் இடுபாடுகளுக்குள் சிக்கி 13 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 5 பேர்



படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்த விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

அமெரிக்கா

## 100க்கும் மேற்பட்ட கார்கள் ஒன்றோடொன்று மோதி விபத்து

அமெரிக்காவின் கொலராடோ மாகாணத்தில் அண்மைக்காலமாக கடுமையான பனிப் பொழிவு காணப்படுகின்றது.

குறிப்பாக டென்வர் நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் (05) இரவு 2.5 அங்குல அளவுக்கு பனிப்பொழிவு பெய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இப்பனிப்பொழிவு காரணமாக, குறித்த நெடுஞ்சாலையில்



பனிக்குவியலில் கார் சக்கரங்கள் சிக்கி வழுக்கியதில் 100க்கும் மேற்பட்ட கார்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இதன் காரணமாக அந்த நெடுஞ்சாலையில் சுமார் 5 மணி நேரம் போக்குவரத்து பாதிப்படைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




பிரான்ஸ்

## சைக்கிளில் சவப்பெட்டி

பிரான்ஸின் தலைநகர் பாரிஸில், சைக்கிளில் பிரேத ஊர்தி வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பிரான்சில் அறிமுகப்படுத்தப்பட்ட முதல் சைக்கிள் பிரேத ஊர்தி இதுவாகும். பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட இந்தச் சைக்கிள் மூலம் சவப்பெட்டியைக் கொண்டு செல்வது சுற்றுச்சூழலைப் பாதிக்காது என இதனை உருவாக்கிய இசபெல் ப்ளூமேரோ தெரிவித்துள்ளார்.

இச் சைக்கிள் பிரேத ஊர்தி வசதி சுவிட்சர்லாந்து, டென்மார்க் மற்றும் சில ஐரோப்பிய நாடுகளில் ஏற்கெனவே நடைமுறையில் உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

கனடா

## கல்வி சார் ஊழியர்கள் 55,000 பேர் வேலைநிறுத்தப் போராட்டம்

கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்தில் கல்வி நிலையங்களைச் சேர்ந்த சுமார் 55,000 ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதால், அனைத்து பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன.

அதிக மக்கள் தொகை கொண்ட மாகாணமான ஒன்டாரியோவில் ஊதிய உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 583 கல்வி நிலையங்களை சேர்ந்த ஊழியர்கள் இவ்வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் போராட்டத்தில் ஈடுபடும் பணியாளர்களுக்கு நாளொன்றுக்கு 4,000 டொலர் அபராதம் விதிக்க அரசு சட்டம் இயற்றிய நிலையிலும், மாகாணம் முழுவதும் ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கொலம்பியா

## பஸ் கண்ணாடிகளை உடைத்து பெண்கள் போராட்டம்



கொலம்பியாவில், அரச பஸ்களின் கண்ணாடிகளை உடைத்து ஆயிரக்கணக்கான பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மையில் ‘ஹிலாரி கேஸ்ட்ரோ‘ என்ற 17 வயதுச் சிறுமி ‘தான் பயணித்த பஸ்ஸொன்றில் மர்ம நபரால் தனது உடமைகள் பறிக்கப்பட்டு, பாலியல் தொந்தரவுக்கு உட்படுத்தப்பட்டதாகவும், இதுகுறித்து பொலிஸாரிடம் புகாரளிக்க முற்பட்டபோது ஒத்துழைப்பு கிடைக்கவில்லை என்றும் சமூக வலைத்தளத்தில் வீடியோவொன்றை வெளியிட்டு இருந்தார்.

குறித்த வீடியோவானது மக்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், இச்சம்பவத்தினைக் கண்டித்து போராட்டத்தில் குதித்த பெண்கள், அரச பஸ்கள் மீது கண்டன வாசகங்களை எழுதி தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.

இருபதுக்கு – 20 உலகக் கிண்ணம்:

# அரையிறுதியில் இந்தியா, பாகிஸ்தான்

### நெதர்லாந்திடம் தோற்ற தென்னாபிரிக்கா வெளியேற்றப்பட்டது

அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதிப் போட்டிகளுக்கு இந்தியா, பாகிஸ்தான் தகுதி பெற்றுள்ள நிலையில், தொடரிலிருந்து தென்னாபிரிக்கா வெளியேற்றப்பட்டுள்ளது.

நெதர்லாந்திடம் அடிலெய்ட்டில் நேற்று நடைபெற்ற குழு இரண்டு சுப்பர் - 12 போட்டியில் தென்னாபிரிக்கா தோற்றதுடன், பங்களாதேஷை பாகிஸ்தான் வென்ற நிலையிலேயே தென்னாபிரிக்கா தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டதுடன், இந்தியாவும், பாகிஸ்தானும் அரையிறுதிப் போட்டிகளுக்குத் தகுதி பெற்றுள்ளன.

தென்னாபிரிக்கா எதிர் நெதர்லாந்து

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

நெதர்லாந்து: 158/4 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: கொலின் அக்கர்மன் ஆ.இ 41 (26), ஸ்டீஃபன் மைபேர்ஃக் 37 (30), டொம் கூப்பர் 35 (19), மக்ஸ் ஓ டோட் 29 (31), ஸ்கொட் எட்வேர்ட்ஸ் ஆ.இ 12 (07) ஓட்டங்கள். பந்துவீச்சு: கேஷவ் மஹராஜ் 2/27 [4], அன்றிச் நொர்கியா 1/10 [4], ஏய்டன்




மார்க்ரம் 1/16 [2], வெய்ன் பார்னல் 0/32 [4])

தென்னாபிரிக்கா: 145/8 (பந்துவீச்சு: பிரண்டன் குளோவர் 3/9 [2], பிரட் கிளாசன் 2/20 [4], பஸ் டி லீட் 2/25 [3], கொலின் அக்கர்மன் 0/16 [3], லோகன் வான் டி பீக் 0/23 [3])

போட்டியின் நாயகன்: கொலின் அக்கர்மன்

பாகிஸ்தான் எதிர் பங்களாதேஷ்

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

பங்களாதேஷ்: 127/8 (துடுப்பாட்டம்: நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ 54 (48), அஃபிஃப் ஹொஸைன் ஆ.இ 24 (20), சௌமியா சர்க்கார் 20 (17) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷகீன் ஷா அஃப்ரிடி 4/22 [4], ஷடாப் கான் 2/30 [4], இஃப்திஹார் அஹ்மட் 1/15 [3], ஹரிஸ் றாஃப் 1/21 [4], நசீம் ஷா 0/15 [3])

பாகிஸ்தான்: 128/5 (18.1 ஓவ.) (துடுப்பாட்டம்: மொஹமட் றிஸ்வான் 32 (32), மொஹமட் ஹரிஸ் 31 (18), பாபர் அஸாம் 25 (33), ஷண் மசூட் ஆ.இ 24 (14) ஓட்டங்கள். பந்துவீச்சு: நசும் அஹ்மட் 1/14 [4], முஸ்தபிசூர் ரஹ்மான் 1/21 [4], எபொடொட் ஹொஸைன் 1/25 [3.1])

போட்டியின் நாயகன்: ஷகீன் ஷா அஃப்ரிடி

இதேவேளை, மெல்பேணில் நடைபெற்ற சிம்பாப்வேயுடனான போட்டியில் வென்ற இந்தியா குழுவில் முதலிடத்தைப் பெற்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

இந்தியா: 186/5 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: சூரியகுமார் யாதவ் ஆ.இ 61 (25), லோகேஷ் ராகுல் 51 (35) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷோன் வில்லியம்ஸ் 2/9 [2], சிகண்டர் ராசா 1/18 [3], வெலிங்டன் மஸகட்ஸா 0/12 [2])

சிம்பாப்வே: 115/10 (17.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: றயான் பேர்ள் 35 (22), சிகண்டர் ராசா 34 (24) ஓட்டங்கள். பந்துவீச்சு: இரவிச்சந்திரன் அஷ்வின் 3/22 [4], ஹர்டிக் பாண்டியா 2/16 [3], மொஹமட் ஷமி 2/14 [2], அர்ஷ்டீப் சிங் 1/9 [2], புவ்னேஷ்வர் குமார் 1/11 [3])

போட்டியின் நாயகன்: சூரியகுமார் யாதவ்

## பாலியல் குற்றச்சாட்டில் குணதிலக கைது

அவுஸ்திரேலியாவின் சிட்னியின் கிழக்கில் இடம்பெற்றதாகக் கூறப்பட்டும் பாலியல் குற்றச்சாட்டு தொடர்பில் இலங்கை கிரிக்கெட் அணியின் சகலதுறைவீரரான தனுஷ்க குணதிலக பொலிஸாரால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

சிட்னியின் மத்திய வர்த்தக மாவட்டத்திலுள்ள அணி ஹொட்டலில் இருந்து நேற்று (06) அதிகாலையில் குணதிலக கைது செய்யப்பட்டிருந்தார்.

29 வயதான பெண்ணொருவரை பாலியல் ரீதியாக தாக்கிய அறிக்கைகள் குறித்த பொலிஸ் விசாரணையையடுத்தே குணதிலக கைது செய்யப்பட்டிருந்தார். அவர், அவுஸ்திரேலிய நீதிமன்றத்தில் இன்று (07) ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

இந்நிலையில், சுகயீனம் அடைந்த வீரரை இலங்கைக்கு உடனடியாக அழைத்துவராமை தொடர்பில் இலங்கை கிரிக்கெட் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

இலங்கை அணி இங்கிலாந்திடம் தோல்வி அடைந்ததால் தொடரில் இருந்து வெளியேறியது. அதனையடுத்து, தனுஷ்கவை தவிர்த்து அஸ்திரேலியாவில் இருந்து புறப்பட்டுள்ளது.



குலசிறி சமரசிங்க ஞாபகார்த்தத் தொடர்:

## சம்பியனான உடப்புஸ்ஸலாவை சென் மார்க்கெட்



■ ஆ. ரமேஸ்

நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட உடப்புஸ்ஸலாவை விமலதர்ம வித்தியாலயத்தின் பிரதான விளையாட்டு மைதானத்தின் பார்வையாளர் மண்டபம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இதனையொட்டி அகில இலங்கை கரப்பந்தாட்ட பயிற்சிவிப்பாளரும், நடுவருமான குலசிறி சமரசிங்க ஞாபகார்த்த மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரொன்று இடம்பெற்றது.

உடப்புஸ்ஸலாவை பிரதேச இளைஞர்களின் விளையாட்டு ஊக்குவிப்பாளர்களான டி. நவரட்ணராஜா, எம். முத்துக்குமார் (சசி) ஆகியோரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இத்தொடரில் உடப்புஸ்ஸலாவை பிரதேசத்தை சேர்ந்த 18 அணிகள் பங்குபற்றின.

அணிக்கு ஏழு பேர் கொண்ட இத்தொடரில் உடப்புஸலாவை சென் மார்க்கெட் எஸ். சி.சி விளையாட்டுக் கழகம், உடப்புஸ்ஸலாவை எஸ் எம்.எ ஆகிய அணிகள்



இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியிருந்தன. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற உடப்புஸ்ஸலாவை எஸ்.சி.சி அணி நிர்ணயிக்கப்பட்ட நான்கு ஓவர்களில் முதலில் துடுப்பெடுத்தாடி 3 விக்கெட்டுக்களை இழந்து 37 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு 38 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய உடப்புஸ்ஸலாவை எஸ். எம்.எ விளையாட்டு அணி 28 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 10 ஓட்டங்களால் தோல்வியை தழுவியது.

அந்தவகையில் சம்பியனான எஸ். சி.சி அணியினருக்கு வெற்றிக் கேடயம், பணப்பரிசாக 20,000 ரூபாய் வழங்கப்பட்டது. இரண்டாமிடத்தைப் பெற்ற உடப்புஸலாவை எஸ்.எம்.எ அணியினருக்கு பணப் பரிசு 10,000 ரூபாய், கேடயம் வழங்கப்பட்டது.

மாவட்ட மட்டத்தில்

## சம்பியனான திருகோணமலை சென். மேரிஸ் அணிகள்





■ ஒலுமுதீன் கியாஸ்

அகில இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட சம்மேளனத்தால் திருகோணமலை மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையே நடாத்தப்பட்ட பெண்கள் பிரிவுக்கான கால்பந்தாட்டத் தொடரில், திருகோணமலை சென் மேரிஸ் கல்லூரியின் இரண்டு அணிகள் மாவட்ட மட்ட சம்பியனாகின.

சென். மேரிஸின் 14, 16 வயது ஆகிய இரண்டு அணிகளுமே சம்பியனாகியிருந்தன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 07 நவம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது